நமது ஈழநாடு
www.namathueelanadu.com



குரல் 01 மலர் 05 நவம்பர் 2020 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



"மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை அவர்கள் காலத்தை உருவகிப்பவர்கள்"

- *தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

# எமக்காய் எரிந்த சூரியர்கள்



படம்: குமணன்

# தாயகத்தில் மறுக்கப்படும் நினைவு கூரும் உரிமை



தாயகன்

இன அழிப்புச் செய்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறும்போதே தமிழினம் அடக்குமுறைக்குள் தான் தன் வாழ்வியலை நடத்தப்போகின்றது என்பதற்கான அத்தனை எச்சரிக்கை மணிகளும் ஒலித்தாகிவிட்டது. அவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப்போன மாவீரர்களை நினைவு கூருவதற்கான கூட்டுரிமை மறுதலிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய பேரினவாத அரசு மவீரர்களை நினைவு கூருவதற்கு இடமளிக்காது என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். அதனால் அதனை இட்டு பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

ஏனென்றால் முள்ளிவாய்க்காலில் இனவழிப்புச் செய்த வேளையோடு, விடுதலை வேட்கையோடு வித்தாகி மண்ணில் உறங்கிக்கொண்டிருந்த மறவர்களின் துயிலும் இல்லங்களை டோசர்கள் மூலம் நிர்மூலமாக்கியது இதே ராஜபக்ஷ அரசு தான்.

போரில் வெற்றி பெற்றுவிட்டதாக மமதை கொண்டு அவ்வெற்றி கண்ணை மறைக்கவும், மண்டவர்களை கூட தமிழர்கள் மறந்துவிட வேண்டும் என்றும் கங்கணங்கட்டி தயாகத்தில் காணப்பட்ட விடுதலை வீரர்களின் நினைவாலயங்களை அழித்தொழிக்கப்பட்டன.

அந்த அழித்தொழிப்பு நடைபெற்ற போது தற்போதைய ஜனாதிபதி அன்று பாதுகாப்புச் செயலாளர் என்ற வேறுபாடு மட்டுமே இருந்தது. ஆனால் நிகழ்ச்சி நிரல் ஒன்றாகத்தான் இருந்தது. தற்போதும் அந்த நிகழ்ச்சி நிரல் அப்படியே தான் இருக்கிறது.

அதுமட்டுமன்றி அரச இயந்திரத்தின் முழுமையான துணையுடன் அந்த நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. ஏற்கனவே தமிழர் தாயகத்தில் ஒன்றரை இலட்சம் படைகள் நிலைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

தாயகத்தில் சாதாரணமாக நடமாடும் வெகுசன மனிதனுக்கான சுதந்திரமே பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் சிங்கள தேசியவாதத்திடம் விடுதலைக்காக தம் உயிர்களை ஈகம் செய்த புனிதர்களை நினைவு கூருவதற்கான அனுமதியை எதிர்பார்ப்பதே அபத்தமானது.

அதனைவிடவும், அரசாங்கத்தினை சூழவும் போரில் முன்னின்று போர்க் குற்றங்களை இழைத்த அத்தனை அதிகாரிகளும் பதவி நிலைகளில் காணப்படுகின்றார்கள். தம்மிடம் தோற்றவர்களை நினைவு கூருவதற்கு இடமளிப்பதா என்ற குறுகிய மனோ நிலையினைக் கொண்ட அத்தரப்பினர் எள்ளளவு நினைவு கூரலுக்கான இடைவெளியையும் வழங்கி விடக்கூடாது என்பதில் திடமாக இருக்கின்றனர்.

கடந்த தடவை கோட்டாபயவுக்கு அதிகாரம் கைக்குவந்து சொற்ப நாட்கள் என்பதால் சடுதியாக எதுவும் செய்திருக்க முடிந்திருக்கவில்லை. வெறுமனே புலனாய்வாளர்களை முடுக்கிவிட்டு தகவல்களை மட்டுமே திரட்டி வைக்க முடிந்தது. ஆனால் அதற்கு பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், தியாக தீபம் திலிபனின் நினைவேந்தல் ஆகியவை திட்டமிட்டு தடுக்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பங்களில் தமிழினம் விழித்துக்கொண்டது. ஆனால் ஒரு தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் ஊடாக இணக்கப்பாடொன்றை எட்டியிருக்காதுள்ளமையும், பொறிமுறையொன்றை ஏற்படுத்தியிருக்காமையும் துரதிஷ்டம் தான்.

அரசியல் ரீதியான பேதங்கள் இருந்தாலும், கொள்கைகள் ரீதியான கோப தாபங்கள் இருந்தாலும், மாவீரர்கள் நம் அனைவருக்குமாகவே களம் கண்டு மடிந்தார்கள் என்ற புரிதல் தாயகத்தில் உள்ள அனைத்து அரசியல் தரப்பிடமும் ஏற்பட வேண்டியது கட்டாயமானது.

எனென்றால், வீர விழுதுகளாய் திளைத்தவர்களை மாண்ட பின்னர் அஞ்சிலிப்பதற்கு வழியில்லை. அவர்கள் அமைதியாக உறங்கிய ஆலயங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு கற்குவியல்களாக்கப்பட்டுள்ளன. இன்னும் சில இடங்கள் பிணந்தின்னி கழுகுகள் போன்று படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

தமக்காக சமர்களமாடியவர்களை அஞ்சிலிப்பதற்கு கூட முடியாவில்லையே என்ற ஏக்கத்துடன் இருக்கும் தாயகத்தின் சாதாரண வெகுஜன மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதொன்றாக இருக்கின்றது.

வீரர்களுக்கான மரியாதையையும், அன்புக்குரிய உறவுகளின் மன ஆற்றுப் படுத்தலையும் மையப்படுத்திய புரிதலின் காரணமாகவே மேதகு.வே.பிரபாபகரன் அவர்கள், தமிழீழ விடுதலைப் போரில் முதல் களச் சாவடைந்த வீரர் லெப்ரினன்ட் சங்கர் (சத்தியநாதன்) அவர்களின் நினைவு நாளான நவம்பர் 27 ஆம் நாளை 1989 ஆம் ஆண்டு மாவீரர்கள் நாளாக பிரகடனப்படுத்தினார்.

அன்றிலிருந்து தாயகமெங்கும் தமிழீழ மாவீரர் நாள் தமிழீழ மக்களாலும், உலகத் தமிழர்களாலும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் மறவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலித்து அவர்களின் அன்புக் குரியவர்களும் மனங்களும் ஆற்றுப் படுத்தப்பட்டே வந்திருக்கின்றது.

ஆனால் இம்முறை, அவ்வாறான நிலைமை இருக்கவில்லை. உள ஆற்றுப் படுத்தலுக்கு பதிலாக உளக்குமுறலும், ஏக்கமும், தாகமும் தான் அதிகரித்துள்ளது. அந்தமக்களின் உணர்வுகளுக்கு மதிப் பளித்து நடைமுறைச்சாத்தியமான ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டியது அந்த மக்களின் ஆணை பெற்றவர்களின் பொறுப்பாகின்றது.

ஆணைபெற்றவர்கள் பிரிந்து நிற்பதும், ஆணைபெற துடிப்பவர்கள், நினைவு கூரலை அரசியல் மயப்படுத்தவதும், ஆணைபெற்றிருப்பவர்களில் சிலர் அரசியலில் நிலைபெறுவதற்காக மாவீரர்களின் உறவுகளை உரிமை கொண்டுவதும் என்று வேடிக்ககைகள் பல அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

விடுதலைக்காக ஏங்கி நிற்கும் இனமொன்றின் பிரமுகர்கள் இவ்வாறு நடந்துகொள்வதானது, மிக கீழ்த்தரமான மூன்றாம் நிலைச் செயற்பாடாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது. மக்களுக்கான அரசியலை மறந்து மாண்டவர்கள் மீது அரசியல் செய்வது போன்ற இழிநிலை வேறெங்கும் இல்லை.

அதுவொருபுறமிருக்கையில், இந்தமுறை மாவீரர்களின் நினைவு கூரல்களுக்கு காவல்துறையினரின் முழுமையான பின்னணியில் நீதிமன்றங்களின் ஊடாக தடை உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த தடை உத்தரவுகளுக்கு மேலதிகமாக கொரோனா தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது.

அதனைப்பயன்படுத்தியும், கூட்டு நினைவு கூரல்களுக்கான தடைகள் முறையாக பெறப்பட்டுள்ளன.

இந்த தடைகளை சட்ட ரீதியாக உடைப்பதற்கு இம்முறை முயற்சியொன்று எடுக்கப்பட்டது. ஆனாலும் யாழ். மேல்நீதிமன்றம் அதற்கான ‘அதிகாரம்’ தன்னிடமில்லை என்று கைவிரித்துவிட்டது.

வடக்கில் உள்ள மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் மட்டும், சட்டங்களை மீறினால் கைது செய்யுங்கள் என்று கூறி தடை உத்தரவை விதிப்பதற்கு மறுதலித்துள்ளது. மல்லாகம் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்த காங்கேசன் துறை காவல் துறையினர் தாம் தோல்வி கண்டுவிட்டதாக எண்ணி, கைதுகளை செய்வதற்கு திட்டமிட்டு வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா நீதிமன்றங்களின் ஊடாக நீதியைப் பெற முடியும் என்றால் இனவழிப்புக்கான நீதிக்காக சர்வதேச விசாரணையொன்றை கோர வேண்டிய அவசியமே இருந்திருக்காது. இந்த பட்டறிவு கூட இல்லாது சட்டரீதியாக நினைவுகூரலுக்கு அனுமதி பெற முயன்ற ‘சட்டாம்பிகளை’ என்னவென்று கூறுவது. சரி, அவர்களும் முயன்று பார்த்தார்கள் என்று விட்டுவிடலாம்.

ஆனால் நினைவு கூரல் விடயமானது வெறுமனே சட்டப்பிரச்சினை அல்ல. தனி மனித அடிப்படை உரிமைப் பிரச்சினை, தமிழர்களின் கலாசார, பண்பாட்டுப் பிரச்சினை, தமிழீழ கூட்டுரிமைப் பிரச்சினை. அரசியல் ரீதியான பிரச்சினை, ஆகவே இந்த விடயத்தினை இத்துடன் மறந்துவிடலாகாது.

இந்தவிடயத்தினை அரசியல் தரப்பினர் கையாளவும் இடமளிக்க முடியாது. ஏனென்றால் வெறுமனே இது அரசியல் பிரச்சினை மட்டுமல்ல. இனமொன்றின் பிரச்சினை, பாரம்பரிய சமூகமொன்றின் பிரச்சினை. தாயகத்தில் வாழும் அத்தனை தமிழுறவுகளின் பிரச்சினை. ஆகவே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்றால் தாயகத்தின் அனைத்து தரப்புக்களும் அணி திரள வேண்டும். நினைவாலயங்கள் சீராக பராமரிக்கப்பட வேண்டும். புனரமைக்கப்பட வேண்டும். மறவர்களின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவை அனைத்திற்குமான பொறிமுறையொன்றும் வேண்டும். இந்த மாவீரர்கள் நாள் அதற்கான அடித்தளத்தினை இடவேண்டும். இதில் புலம்பெயர் உறவுகளும் துணையாக தூண்களாக இருக்க வேண்டும். உரிமையோடு சுடரேற்றி உறுதி எடுக்கும் நாளாக இது அமைய வேண்டும்.





# ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்ன?

# ஈழத்தமிழ் மக்களின் தேசியத்தை எவ்வாறு கட்டியெழுப்புவது?

ஈழத்தமிழர்களின் தற்போதைய பிரச்சினைகள் என்ன மற்றும் ஈழத் தமிழர்களின் தேசியத்தை தற்போதைய நிலையில் எப்படி கட்டி எழுப்புவது என்பது பற்றியும் அரசியல் ஆய்வாளர் திருநாவுக்கரசு காணொளி வடிவில் ஆலோசனைகளை முன்வைத்துள்ளார்.

அரசியல் சூழ்நிலைகள் மற்றும் பூகோள அரசியல் தொடர்பான விபரிவான பார்வையுடன் வெளிவந்துள்ள அவரது காணொளி, தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மிகவும் பொருத்தமானதும் அத்தியாசவானமானதுமாக இருப்பதால், அதனுடைய சுருக்கத்தினை நமது ஈழநாட்டின் வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.



**திருநாவுக்கரசு**
**அரசியல் ஆய்வாளர்**

ஈழத்தமிழ் மக்களின் வாழ்வு பற்றியும் அவர்களின் தேசியம் மற்றும் அரசியல் பற்றியும் மிகவும் மேம்போக்கான பேச்சுக்களே இன்றைய நாட்களில் நிலவி வருகின்றன. பண்பாட்டால் தமிழராகிய நாம் தொன்மையான வழமான இனமாவோம். யுத்தத்தின் பின்னர் இந்த இனம் சிதலமாக்கபட்டு கிடக்கிறோம். சிங்கள பௌத்த பேராதிக்கத்தால் நாம் தொடர்ச்சியாக அழிவுகளை சந்தித்த வண்ணம் இருக்கிறோம். சிங்கள பௌத்த அரசவாதமே இலங்கையிலுள்ள பிரச்சினையாகும். அதுவே தமிழ் இனத்துக்கும் ஜனநாயகத்துக்கும் சலாவாக உள்ள பிரச்சினை.

சிதலமாக்கபட்டதிலிருந்து எமது இனத்தை கட்டி எழுப்ப வேண்டியது எமது முதலாவது பிரச்சினையாகும். எம்மை தற்காத்துக்கொண்டு நாம் வளரவேண்டியுள்ளது. இது எமது இரண்டாவது பிரச்சினையாகும். யுத்தத்தால் எமது மக்களிற்கு ஏற்பட்ட வடுக்கள் மாறாமல் அவை பழகிப்போகின்ற துர்பாக்கிய கட்டத்துக்குள் வாழ்ந்து வருகிறோம். நாங்கள் இந்த புள்ளியிலிருந்து மீண்டு எழவோண்டுமாக இருந்தால் எமது மக்களை அரசியல் ரீதியாக வழிநடத்தும் தலைமைகள் தங்களை திருத்திக்கொண்டு விடுதலை அரசியலை நோக்கி பயணிக்கவேண்டும். ஆனால் யாதார்த்தத்தில் தமிழ் மக்களுக்கு சரியான தலைமை அமையாமல் அவர்கள் தங்களுக்குள் பிளவுபட்டு போயுள்ளார்கள்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தலைமைகள் தமிழ் தேசியத்தை உளமார புரிந்து கொண்டவர்களாக இருக்கவேண்டும். ஆனால் அவர்கள் கடந்த 70 வருடமாக வரட்டுத்தனமான தூய்மைவாதம் பேசி பொய்மையான அரசியல் மாயைக்குள் சிக்கிக்கிடக்கிறார்கள்.

தமிழ் மக்களின் பண்டைய கலாச்சார விழுமியங்கள் என்பது ஜனநாயகம் சமவுடமை மதச்சகிப்பு தன்மை என்ற தூண்களால் கட்டி எழுப்பபட்டது. இப்படியான பண்டைய தமிழர் விழுமியங்களை புரிந்து கொண்ட ஒருவனால் மட்டுமே தமிழருக்கான சரியான தலைமையை கொடுக்கமுடியும். அப்படியான புரிதல் இன்றைய தமிழ் அரசியல் தலைவரிகளிடம் காண முடியாத ஒன்றாக உள்ளது.


சாதிகளாலும் பிரதேச வாதத்தாலும் பிரிந்து போயுள்ள தமிழ் மக்கள் தங்களுக்குள் முதலில் ஒன்றுபட்டு விட்டு தமக்கான உள்நாட்டு அரசியல் கொள்கை, அயல்நாட்டு அரசியல் கொள்கை மற்றும் பூகோள நாடுகளை எவ்வாறு கையாழ்வது என்பது தொடர்பான அரசியல் கொள்கைகளை வகுத்து கொள்ள வேண்டும். அப்படியான இந்த மூன்று அரசியல் கொள்கைகளும் சமாந்தரமாக ஒரு நேர் கோடாக செல்லும் பட்டசத்திலேயே தமிழர் தமது தேசியத்தை மீட்டெடுத்து கௌரவமாக வாழ முடியும்.

இன்று இலங்கை தீவின் ஜனநாயம் என்பது தமிழ் மக்களின் தேசியத்தில்தான் அத்திவாமிட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு ஜனநாயம் இல்லையென்றால் அங்கு யாருக்கும் ஜனநாயகம் கிடையாது. தமிழ் மக்களை நாங்கள் ஜனநாயக ரீதியாக ஐக்கியப்படுத்தி ஜனநாயகத்துக்கு எதிரான தேசியத்துக்கான போராட்டம் ஒன்றை நாம் சரிவர வடிவமைக்க வேண்டிய ஒரு காலகட்டத்திலுள்ளோம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் ஆய்வாளர் திருநாவுக்கரசின் மேற்படி உரையின் முழுவடிவத்தை அவரின் காணொலியில் காணலாம்.

## ஈழதேசத்தில் அன்று ....




















நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 01 மலர் 05 நவம்பர் 2020 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# மாவீரர் சொல்லி நிற்கும் செய்தி

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தன மேனிகளை நினைவில் ஏந்தி அஞ்சலித்துஇ கௌரவித்து அதனூடாக தமிழர் தேசியத்தின் மீதும்இ தமிழர் தாயகத்தின் மீதும் தமிழர்களாகிய நாம் என்றென்றும் கொண்டிருக்கும் எவராலும் எதனாலும் அசைக்கவோ அழிக்கவே முடியாத பற்றுருதியை விடுதலையுணர்வுடனும் சுதந்திர வீச்சுடனும் வெறுமனே நினைவில் மட்டுமல்லாது எங்கள் ஆத்மாவிலும் இம்மியளவும் குறையாது உரமாக பதித்துள்ள செய்தியை தீபமேற்றி சத்தியம் செய்யும் நாள் மாவீரர் நாள்.

இது நமது அரசியல் வாதிகள் அவ்வப்போது மேற்கொண்டுவரும் ஒரு சம்பிரதாய பூர்வ சத்தியப்பிரமாணம் போன்றதல்ல. 'நாமார்க்கும் குடியல்லோம்' என எமது கொப்பாட்டன் ஒருவன் கம்பீரமாக ஓங்கி ஒலித்து உலகிற்கு நம்மைப்பற்றி பிரகடணம் செய்து எமக்கு எம்மை இனம் காட்டி எமக்கான தடம் காட்டிச் சென்ற வார்த்தையின் அடிப்படையில் ஆனது.

'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் – பின் வேறொன்றும் சொல்வாரோ?' என முறுக்கு மீசை கவிஞர் மகாகவி பாரதி பாடிச்சென்ற விடுதலை வரிகளுக்கு உயிர் கொடுக்க தம்மின்னுயிரையே தியாகம் செய்த மாவீரர்களின் தடம் தொடர் சங்கற்பம் கொண்டு நிற்கும் தமிழ் உணர்வாளர்களின் ஆத்மாவிலிருந்து கரைந்தெழுவது.

அதனால் கார்த்திகை பூ மலரத் தொடங்குது என்ற செய்தியே அடக்கு முறையாளருக்கு அச்சத்தை ஏற்படுத்தும் ஒன்றாகிவிட்டது. அதனால் பௌத்த சிங்கள பேரினவாதிகளான இலங்கையின் ஆட்சியாளர்கள் நாட்காட்டியில் கார்த்திகை மாதமே இருக்கக்கூடாது என்ற அளவுக்கு கடுப்பேறிக் கதைக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

கடந்த மூன்று சதாப்த காலத்திற்கு மேலாக உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் மக்கள் மாவீர் நாள் நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்ளும் தமக்கான உரிமையை ஒருபோதும் எவரிடமும் கெஞ்சி யாசித்து பெற்றுக்கொண்டதே இல்லை. அது அவர்களின் தேசியகலாசாரத்துடன் ஒன்றாக பின்னிப்பிணைந்த வாழ்வியல் உரிமை யாக மட்டுமல்ல கடமையாகவும் அவர்களே ஆக்கிக் கொண்டார்கள் உலகமே வியந்து நோக்கும் ஒன்றாக.

தமிழர் தம் வீர் தியாக வாழ்வியல் உரிமையும் பெருமையும் உலகிற்கு நெஞ்சு நிமிர்த்தி கம்பீரம் காட்டி அடையாளப்படுத்தும் நாள். இது நாமே நம்மினத்துக்கென்ற தனித்துவம் மிக்க நாளாக உருவாக்கி அடையாளப்படுத்திக் கொண்ட நாள்.

எனவே இது தொடர்பான விடயங்களில் எம்மை நாமே நெறிப்படுத்தி நினைவேந்தலை மேற்கொள்ளும் உரிமை நமக்கே உரியதாகும். இந்த நாள் நாம் வேறு எவரையும் எந்த இனஇ மதஇ சமூகத்தை சேர்ந்தவர்களையும் அவமதிக்கும் நாளே அல்ல. எனவே இந்நாள் தொடர்பான நிகழ்வுகளை பரிபூரணமாக நிறைவேற்றும் கடமை மட்டுமல்ல உரிமையும் கூட எமக்கானதேயாகும்.

இந்த உரிமையில் தலையீடு செய்வதோ அதனை நிறைவேற்ற தடை விதிப்பதோ தமிழ் தேசிய இனத்தின் சுயாதீனம் உரிமையில் அத்துமீறி அதிகாரம் செலுத்த முனையும் சர்வதிகார செயற்பாடே யாகும்.

இந்த ஆண்டு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நாட்களின் போது மேற்கொண்ட பேரினவாத மேலாதிக்க அணுகுறைகளையே மாவீரர் வாரத்திலும் இலங்கை அரசு கையாண்டுள்ளமையானது பலமான ஆட்சியென கூறிக்கொள்ளும் அதன் பலவீனமான கருத்தியல் நிலைப்பாட்டையும் சிறுபான்மை இனத்தவர் மீதான ஒடுக்குமுறைச் சிந்தனையையுமே வெளிப்படுத்தி நிற்கின்றது.

இதில் வேதனைக்குரிய விடயம் என்வென்றால் தன்னிமான உணர் எழுச்சியுடன் எமக்கே உரிமையான ஒரு ஆத்மார்த்தமான நினைவேந்தல் வாரத்தை நாம் அனுஷ்டிக்க தடைசெய்து அச்சுறுத்தல் விடுக்கும் ஆட்சியாளரிடம் தமிழ் தேசியத்தின் காவலர்கள் எனக் கூறிக்கொண்டு உலக உலாவரும் தலைவர்கள் சிலர் அதற்கான அனுமதியை வழங்கும்போது யாசித்து நிற்கும் அவமானகரமான நிலைதான். இந்த நடிப்பின் சுதேசிகள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலக்கட்டாயம் உள்ளது.

வீரர்கள் எந்த உரிமைகளுக்காகவும் யாசகம் செய்வதில்லை. கேட்டுப்பெறுவது பிச்சை. போராடி வெல்வது உரிமை. மாவீரர்கள் என்றுமே மக்களுக்கு சொல்லி நிற்கும் செய்தி.

# சீன வர்த்தக கூட்டில் அமெரிக்க நண்பர்கள்!



இதயச்சந்திரன்,
சிரேஷ்ட ஊடகவியலாளர்

உலகின் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்று உருவாகியுள்ளது.

சந்தைகளைப் பங்கிடலும், அதன் மூலம் வர்த்தகத்தை விரிவுபடுத்தலுமே இவ்வகையான ஒப்பந்தங்களின் நோக்கம்.

அதிலும் ஒரு பிராந்திய அளவில், நேற்றுவரை ஒன்றுக்கொன்று சந்தேகக்கண் கொண்டு பார்த்த, அணிமாறி நின்ற பல நாடுகள் ஒன்று சேர்ந்துள்ளன.

நாணயப்போர், வர்த்தகப்போர், தொழில் நுட்பப்போர் என்று விரிந்து சென்ற அமெரிக்க -சீன நவீன ஏகாதிபத்தியப்போர், இனி வேறு வடிவில் நகரப்போவதை இந்த கூட்டு வர்த்தக ஒப்பந்தம் புலப்படுத்துகிறது.

10 ஆசியான் நாடுகளுடன் , சீனா, ஜப்பான், தென் கொரியா, அவுஸ்திரேலியா, நியூசீலாந்து போன்ற கூட்டமைப்பிலில்லாத 5 நாடுகளும் இணைந்து, கடந்த நவம்பர் 15 ஆம் திகதியன்று, 'முழுமையான பிராந்திய பொருளாதார பங்காளிக் கட்டமைப்பு' (Regional Comprehensive Economic Partnership -RCEP ) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

கடந்த 8 வருடங்களாக இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் இடையில் வந்த TPP வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட டொனால்ட் டிரம்ப் மறுத்ததால். 2017 இல் TPP முழுமையாகக் கைவிடப் பட்டு, மீண்டும் ஆர்செப்பிட்கான (RCEP ) பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தன.

கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதாரத் சீர்குலைவினால், வேறுவழியின்றி இக்கூட்டு ஒப்பந்தம் சாத்தியமானது என்கிற பார்வையுமுண்டு.

சீனாவைப் பொறுத்தவரை, அதன் உற்பத்தித் துறையில் ஓரளவு தேக்கநிலை காணப்பட்டாலும், உற்பத்தியாகும் பண்டங்களிற்கான வாங்குதிறன் கொண்ட சந்தைகள் தேவைப்படுகிறது.

ஏனைய 14 நாடுகளுக்கும் இதேவிதமான பிரச் சினை, அளவு வேறுபாட்டுக் காணப்படுகிறது.

கடந்த ஒரு மாத காலமாக அவுஸ்திரேலியா விற்கும் சீனாவிற்கும் இடையில் நிகழ்ந்த இராஜதந் திர- பொருண்மியப்போர் தீவிரமடைந்திருந்தது. கொரோனா பரவல் குறித்து, சீனாவை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கையை தொடர்ச்சியாக முன்வைத்தது அவுஸ்திரேலியா அரசு.

இதனால் சினம் கொண்ட சீனா, அவுஸ்திரேலியா மீது பொருளாதாரத் தடையை விதித்தது.

சீன துறைமுகத்தை வந்தடைந்த அவுஸ்திரேலியா சரக்குக் கப்பலை தடுத்தது.

ஆனாலும் ஒரு மாதத்தில் எல்லாமே தலை கீழாக மாறிவிட்டது. இதுவரை சீனாவுடன் எந்த வர்த்தக ஒப்பந்தத்திலும் ஈடுபடாத ஜப்பான் தேசம், அமெரிக்க நட்பு வளையத்திலிருந்து வெளியே வருகிறது.

இரண்டாம் உலக மகா யுத்த காலத்திலிருந்து ஜப்பானுடன் முறுகல் நிலையில் இருக்கும் தென் கொரியா, இந்த கூட்டு வர்த்தக தளத்தில் இணை வது வியப்பாகவிருக்கிறது.

ஏற்கனவே ஆசியான் கூட்டமைப்புடன் தனித் தனியே சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை செய்த, சீன (ACFTA ), ஜப்பான் (AIFTA ), அவுஸ்திரேலியா - நியூஸிலந்து (AANZFTA) மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளுக்கு ஏன் இந்த விரிவான- பலமான சுங்கத்தீர்வை குறைந்த வர்த்தக உடன்பாடு தேவைப்படுகிறது?.

TPP (TRANS -PACIFIC ) ஒப்பந்தமானது அமெ ரிக்காவால் கைவிடப்பட்டதும், அந்நாட்டு அதி-பரின் சுதந்திர வர்த்தகத்திற்கெதிரான இறுக்கமான நிலைப்பாட்டினால், அதன் நட்புநாடுகளான ஜப்பான், அவுஸ்திரேலிய மற்றும் தென் கொரியா வின் சர்வதேச வர்த்தக மூலோபாயத்தில் மாற்றம் ஏற்படுகிறது. இவர்களுக்கு பலமான வர்த்தக கூட்டு தேவைப்படுகிறது.

இருப்பினும் சீனா எதிர்கொள்ளும் பிரச்சினை வேறு.

அமெரிக்காவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தை முடிவற்று நீண்டு செல்கிறது. அங்கெலா மேர்கல் இணங்கி வந்தாலும் ஜெர்மனியின் அதிகாரபீட மும், ஐரோப்பிய ஒன்றியத்தின் பலம் வாய்ந்த நாடுகளும் சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய பின்னடிக்கின்றன.

5G விவகாரத்தில் அமெரிக்கா கொடுத்த நெருக்கடியால், HUAWEI நிறுவன ஒப்பந்தங்களை புறந்தள்ளுகிறது பிரித்தானியாவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும்.

'ஆசியாவில் சீனாவின் விரிவாக்கம் அபாய-கரமானது ' என்கிற தந்திரோபாயக் கோசத்தோடு தொடங்கப்பட்ட 'குவாட்'(QUAD), அமெரிக்காவின் படைத்துறை வர்த்தகத்திற்கே சேவை செய்தது. அதுவும், சீனாவின் இருப்பிற்கு அச்சுறுத்தலான விடயமாகப் பார்க்கப்பட்டது.

அதேவேளை RCEP இன் ஆரம்பகால உரையாடல் உறுப்பினரான இந்தியா, இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் ஏன் இணைந்து கொள்ளவில்லை என்கிற கேள்வி, மேற்குலக மற்றும் இந்திய ஊடகங்களில் பலமாக எழுப்பப்படுகிறது.

சீனாவின் விலைமலிவான பொருட்கள் இந்தியச் சந்தையில் குவிந்தால் , உள்ளூார் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதே இந்தியத்தரப்பு வாதம். சுஊநூ இன் 15 நாடுகளிலிருந்து, 2004 இல் ஏற்பட்ட ஏற்றுமதி-இறக்குமதி பற்றாக்குறை ( Trade Deficit ) 7 பில்லியன் அமெரிக்க டொலராகவும், 2018 இல் அப்பற்றாக்குறை 105 பில்லியனாக உயர்ந்துள்ளதாக இந்தியத் தூதுவர் ஒருவர்

(06ஆம் பக்கம் பார்க்க)

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# புதிய அரசியல் சூத்திரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்காக மாவீரர்களின் கல்லறைகளின்மீது உறுதியெடுத்துக்கொள்வோம்



**அழ.இனியவன்**

ஒவ்வொரு ஆண்டு இறுதியின் நவம்பர் மாதம் வந்தவுடன் உலகத்தமிழர்கள் மத்தியில் ஏதேதோ ஒரு மனச்சுமையுடன் கூடியதும் தேசம் தாங்கியதுமான பழைய நினைவுகள் தானாகவே குடிகொண்டு விடுகின்றன. கடந்த 2008நவம்பர் 25ஆம் திகதி, தமிழீழ தேசியத்தலைவரின் மாவீரர் நாள் இறுதி உரையின் பின்னர் தொடங்கி இன்றுவரை நினைவேந்தப்படுகின்ற ஒவ்வொரு மாவீரர் நினைவுநாளும் ஈழத்தமிழர் மனங்களில் தோல்விகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், என்பவற்றோடே தேசம் காக்க களமாடிய காவல் தெய்வங்களின் நினைவு வணக்க நாளும் கடந்து செல்கின்றது.

புதிய கொரோணா கால உலகமாற்றத்தின் முதலாவது மாவீரர் நினைவுநாளாக 2020ஆம் ஆண்டின் மாவீரர் நினைவுநாள்மிகவும் சிறப்பு வாய்ந்ததாக உணரப்படுகின்றது.இந்த நினைவுநாளை நினைவு கொள்வதற்கு புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு அந்த அந்த நாடுகளின் கொரோணா கால சிறப்பு விதிமுறைகளின் கீழ் சில,பல விதிமுறைகளுக்கு அமை-வாக அந்த மக்களின் உணர்வுகளுக்கும் நியாயப்பாடுகளுக்கும் மதிப்பளித்து அந்த அந்த நாடுகள் அனுமதிகளை வழங்கியிருந்தன.

ஆனால் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயக நிலப்பரப்பில் வாழும் தமிழ் மக்களின் நிலமைகள் கடினமாக இருக்கின்றன. இராணுவ இரும்புத்திரைகளுக்குள்ளும் புலனாய்வுச்சதிவலைகளுக்குள்ளும் வழமையாகவே தமிழர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அதிலும் நவம்பர்மாதம் நெருங்கும் போதே புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி முன்னிலை பாதுகாப்பை பலப்படுத்தும் மன நிலையோடு இலங்கை சிங்கள முப்படையினரும் புலனாய்வாளர்களும் ,கூடவே கோதபாய அரச நிர்வாகமும் கொரோணா விதிகளை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மாவீரர் நாள் நிகழ்வுகளை தமிழர்கள் நினைவு கூருவதற்கு அச்சுறுத்தல்களை மேற்கொண்டிருந்தன.

உண்மையில் யுத்தத்தில் இறந்தவர்களை நினைவு கூருதல் என்பதை உலகமரபாகவும் அடிப்படை உரிமைகளாகவும் ஐ.நா. மன்றங்கள் பரிந்துரைக்கின்றன. ஒரு இனத்தின் உரிமைகளுக்கு இன்னொரு இனத்தால்அச்சுறுத்தல் ஏற்படக்கூடுமாயின் அது எதேச்சாதிகார,மற்றும் இனத் துவேச, சர்வாதிகார அரசாகவே உலகால் கருதப்படும். இதை யார் வெளிக்கொண்டு வருவது என்பதே தற்போது எழும் கேள்வியாக இருக்கின்றது.

இனவாத தத்துவங்களை தாங்கிக்கொண்டு இனப்படுகொலைகள் மற்றும் நில ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்ட சிங்கள ஒற்றைப்பெரும்பாண்மை அரசுடன் வேறு வழிகளின்றி தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் இளைஞர்களை ஒன்றிணைத்து ஆயுதப்போராட்டத்தில் குதித்திருந்தார். அதன்வழி, அவரது தத்துவத்தை ஏற்று எமது தேசம்காத்த காவல் தெய்வங்களாக எமது மாவீரச்செல்வங்கள் தங்கள் உயிர்களை ஈகம் செய்திருந்தார்கள். இப்போதைய அரசியல் இடைவெளியை தமிழர் நாம் எவ்வாறு இட்டு நிரப்புவது?விடுதலைப்போராட்டம் முடிவிற்குவந்துள்ள சூழ்நிலைகளை சாதகமாக பயன்படுத்தி பலமற்ற நிலையில் இருக்கின்ற தமிழ் மக்களின்மீது சிங்கள பௌத்த பேரினவாதம் பலத்தை பிரயோகித்துவரு கின்றது.

அதன்வாயிலாக சிங்களத்தலைமைகளால் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு வடக்கு கிழக்கில் மிகப்பெரும் நில ஆக்கிரமிப்பை மேற்கொண்டுவருகின்றனர். தமிழ் அரசியல் வாதிகளுக்கு தமக்கான அரசியல்,தற்காப்பு பற்றிய புற நிலையை சரியாக உருவாக்கவோ, கையாளவோ தெரியவில்லை. அல்லது தெரிந்தும் அதை அவர்கள் தவறவிட்டுள்ளனர்.இதற்காகவா நாம் எமது இத்தனை மாவீரப்புதல்வர்களையும் இழந்தோம் என்பதை தமிழ் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை .

எங்கள் இனத்தின் இறுதித்தலைவன், ஒரு வரலாற்று இனத்தின் பிதாமகன், எங்கள் தேசியத்தலைவர் அவர்கள் ஆற்றிய இறுதி யான மின்காந்த உரையானது விடுதலைக்காய் உயிர் நீத்த மாவீரச்செல்வங்கள் பற்றி பின்வருமாறு உதிர்க்கிறது.

"அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சி யடைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும் அயலவருக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலைநிமிர்ந்து நிற் கிறது. இன்று எமது தாயகத்தின் பெரு நிலப் பரப்பில் எமது தன்னாட்சி நடைபெறு கிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடைவெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளிவீசிப் பறக்கிறது. இந்த மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்." என்று குறிப்பிட்டார்.

அவர் வரலாற்றில் ஒரு உண்மையான மனிதனாக,போராளியாக காலங்கால மாய் அடிமைப்பட்டுக்கொண்டிருக்கின்ற பல்வேறு இனங்களுக்கும் வீரவரலாற்றின் குறியீடாக இருக்கின்றார்.அவரது கொள்கையேற்று விதையாகிப்போன வீர மறவர்களையும் போராளிகளையும் விஞ்ஞான பூர்வமான சித்தாந்தங்களினூடாக வழி நடாத்தியிருந்தார்.

இன்று ஆயுதப்போராட்டத்துடன் அவரும் மௌனமானார். அவிழ்க்கப்படாத விடுகதையின் விடைகளற்ற தொடராக. ஆனால் அவர் தமிழ் மக்களிடமும்,தமிழ் அரசியல்வாதிகளிடமும் விட்டுச்சென்ற வார்த்தைகளும் தத்துவங்களும் தமிழர் தம் அரசியல் விடுதலை தொடர்பாக எவ்வாறு முன்னகரவேண்டும் என்பது விரிவாக அட்டவணைப்படுத்தி பார்க்கப்படவேண்டும். அதன்படி பார்த்தால் தேசியத்தலைவரின் ஆயுத விடுதலைப்போராட்டமாக இருந்தாலும் சரி,அரசியல் விடுதலையாக இருந்தாலும் சரி, அவரது தத்துவம் என்பது விஞ்ஞான ரீதியாக எப்போதும் ஒன்றாகவே இருந்தது. குறிப்பாக அது நியூட்டனின் மூன்றாம் இயக்கவிதிச்சமன்பாட்டை ஒத்திருந்தது.

அதாவது ஆயுதப்போராட்டத்திற்கு பயன்படுத்திய அதே விதியை அந்தப்போராட்டம் தோல்வியடையும்போது எமது அரசியல் விடுதலைக்கும் அதனையே பயன்படுத்தவேண்டும் என்பதே அதுவா-கும். அந்தவகையில் நியூட்டனின் மூன்றாம் விதி பின்வருமாறு அமைகின்றது."ஒரு பொருளின் மீது செயல்படும் ஒவ்வொரு புறவிசைக்கும் அவ்விசைக்குச் சமமானதும், எதிர்த்திசையிலும் அமைந்த எதிர்விசை உருவாகும். புறவிசை ஒரு பொருளின் மீதும் எதிர்விசை மற்றொரு பொருளின் மீதும் செயல்படுவதால் ஒன்றையொன்று இழக்கச் செய்வதில்லை"இவ்வாறாகவே

தமிழீழ தேசியத் தலைவரின் விஞ்ஞான ரீதியிலான இயங்கியல் தத்துவமும் நியூட்டனின் இயங்கியல் தத்துவமும் ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பதை உணர முடியும்.

தமிழரின் ஆயுத விடுதலைப்போராட்டம் ஒரு முடிவிற்கு வந்திருக்கலாம். ஆனால் அதன் எதிர்வினை என்பது அரசியல் பரிமாணத்தில் நகர்த்தப்படவேண்டும் என்பதை உலகத்தமிழர்களிடம் ஒப்படைத்து ,அதன் தத்துவம் ஆயுதப்போராட்டத்தை ஏற்று நின்ற தாயகம்,தன்னாட்சி,சுய நிர்ணயம் எனும் அடிப்படையில் முன்னகர வேண்டும் என்பதே தேசியத்தலைவர்அவர் கள் அனைத்து தமிழர் தரப்பினருக்கும் இறுதியாக கூறிச்சென்ற மாபெரும் செய்தியாகும்.

ஆனால் யுத்தம் முடிவுற்ற 2009இல் இருந்து இன்று 2020ஆம் ஆண்டின் இறுதிக்கட்டத்தில் இருக்கின்றோம். கால ஓட்டத்தின் வழியே தமிழர் நாம் எத்திசையில் சென்று கொண்டிருக்கின்றோம் என்ற கேள்வியை முன்வைத்தால்,குழப்பத்தையும், தோல்வியையும் நோக்கியே ஓடிக் கொண்டிருக்கின்றோம் என்றே பார்க் கப்படவேண்டும். குறிப்பாக தமிழ் அரசியல் தலைமைகள் கடந்த பன்னிரண்டு வருடங் களை எட்டியநிலையிலும்கூட அவர் களால் மக்களை ஓரணியில் ஒன்று திரட்டி,அரசியல் விடுதலைக்கான நகர்வு களை மேற்கொள்ள இன்றுவரை முடிய வில்லை.

ஒரு ஆயுதப்போராட்டத்தின் நிகழ்ச்சி நிரல் எதுவோ அதுவே அரசியல் விடு தலைக்கான நிகழ்ச்சி நிரலாகவும் அமைய வேண்டும். ஆனால் அரசியல்வாதிகள் அடக்கு முறைச்சட்டங்களுக்கு முன் முனிவர்க ளாக மாறிவிடுகின்றனர். அவர்கள் தங்கள் மௌனங்களை கலைத்து சுய நினைவுகளுக்கு வரும் முன்பாகவே

(15ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
www.namathueelanadu.com

நவம்பர் 2020

# கல்லறைகளும் பேசும் மனக்கல்லறைகள் திறக்கப்படும்போது



வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா



காலத்திற்கு காலம் இறைதூதர்களும் சீடர்களும் தோன்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இவ்வாறான இறைதூதர்களையும் சீடர்களையும் மீட்பர்கள் என மக்கள் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். இந்த மீட்பர்கள் கருத்தில் எடுக்கப்படாத மக்களுக்காக, மக்களின் அபிலாசைகளை தீர்த்து வைக்க யாருமே இல்லை என ஏங்கும் போது, ஒரு சமூகமக்களால் இன்னொரு சமூகமக்களாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாதைகளை அனுபவிக்கும் போது, ஒடுக்கப்பட்டு நீதியும் நியாயங்களும் பக்கச்சார்பாகவும் பயங்கர விளைவு-களை ஏற்படுத்தும் போதும், அவர்களை அவர்களின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிப்பதற்காக, மானிடநேயமுள்ளவர்களின் கவனத்திற்கு இப்படியும் ஒரு சமுகம் தத்தளிக்கும் செய்தியை தெரிவிப்பதற்காகவும், மானிடநேயம் மலரவேண்டும் என்பதற்காகவும் அவர்களில் இருந்தே பிறப்பெடுப்பவர்களாக , இந்த மீட்பர்கள் விளங்குகிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் இறைதூதர்களும் சீடர்களும் பிறப்பெடுத்தவாறே இருக்கிறார்கள். இவர்கள் விடுதலைக்காக பாடுபடுகிறார்கள். விடுதலைசார்ந்த கருத்துக்களையும் விழிப்புணர்வையும் மக்களுக்கு வழங்குகிறார்கள். அவர்களின் விடுதலைக்காக தமது உயிரையும் உதிரத்தையும் தியாகத்தோடு அர்ப்பணிக்கிறார்கள். அந்தவகையில் எங்கள் தமிழினத்தின் மீட்பர்களாக மாவீரர்கள் விளங்குகிறார்கள்.

மீட்பர்களின் கனவை ஏந்திச்செல்ல இறைதூதனால் வழிநடத்தப்பட்ட சீடர்கள் இறைதூதனின் கனவை ஏந்திச்சென்று அந்த மக்களின் பூரண விடுதலைக்கு ஊன்றுகோலாகுவர்கள். ஆனால் எங்கள் தமிழினத்துக்கு அவ்வாறான சீடர்கள் வாய்ப்பாக அமையவில்லை. மீட்பர்களின் கனவை ஏந்தி தமிழினத்துக்கு பூரண விடுதலை கொடுக்க யாரும் தயாராக இல்லை. தமிழ் அரசியல்வாதிகளும் தடம்மாறிப்போனார்கள். தமிழ் புத்திஜீவிகளும் தடம்மாறிப்போனார்கள்.

தமிழர்க்குக்கட்சிகள் சார்ந்தும் நல்ல வழிகாட்டிகள் இல்லை. தமிழ்க்கட்சிகள் ஒவ்வொன்றும் மாவீரர்களின் தியாகத்தை ஏலம்விட்டுப்பிழைப்பு அரசியல் செய்கிறது. மாவீரர் தியாகங்களை வைத்து, மக்களின் உணர்ச்சிகளை பகடையாக்கி, தங்களின் பதவிகளையும் தலைமையையும் தக்கவைக்கும் சுயநல அரசியலை மேற்கொள்வதையே காண முடிகிறது.

நியாயமான குறிக்கோள்களோ, நியாயமான விடுதலை சார்ந்த பேரம்பேசல்களையோ மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களையும் கைநழுவ விட்டுவிட்டு, பேரினவாதிகளின் அற்பசலுகைகளுக்காக வாலாட்டும் நாய்களாக மாறிவிட்டனர். இந்த அரசியல் பெருச்சாளிகள் இந்தப் பேரினவாதிகளுக்காக இன்னொரு கைங்கரியத்தையும், மிகத்தந்திரமாக மேற்கொள்கிறார்கள். தேர்தல் வரும் காலத்தில், விடுதலைக்காக குரல் கொடுப்பவர்களையும், அந்த விடுதலை சார்ந்த கருத்துக்களை பின்பற்றும் மக்களையும் வாக்கு வேட்டைக்காக மிகத்தந்திரமாகப் பயன்படுத்தி, அவர்களை தேர்தல் முடிந்த கையோடு பாராமுகமாக்கி, அவர்களின் தேசியம் சார்ந்த எண்ணக்கருக்களை உடைத்து பிளவுபடுத்துவதோடு, அரசுக்கு சார்பான எண்ணங்களுக்கு வலுவூட்டும் நரித்தந்திரத்தையும் கையாள்கிறார்கள்.

இன்னொரு புறத்தில் இந்த அரசியல் கோமாளிகளின் நரித்தனத்தை உணராது, தாயகத்துப்புத்திஜீவிகளும், தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த புத்திஜீவிகளும், எது இல்லாமல்போனால் எமது தமிழ்ச் சமுகம் ஒன்றுபட்டு வாழும் என நினைத்தார்களோ! இந்தச் சமுகம் எவ்வாறெல்லாம் வாழவேண்டுமென்று தம்மை தியாகித்தார்களோ! அதை எல்லாம் கிஞ்சித்தும் மனங்கொள்ளாமல் சாதி,மத பேதங்களை கிளறிக் கொண்டிருக்கிறார்கள்.

"சாதி, மத ,பேதமற்ற சமதர்ம தமிழீழத்தை கட்டி எழுப்புவதே எங்கள் இலட்சியம்" என தம் உயிரை அர்ப்பணித்தவர்களை சற்றும் நினைத்துப்பார்க்காமல், தூர்ந்ததை கிளறி, மேலும் இந்தச் சமுகத்துக்கு அநீதியை செய்பவரேகளாக இருக்கிறார்கள்.

தேவையான விடயத்தை நோக்கி நேர்கோட்டில் நகர்ந்து , விடுதலைக்கு தேவையான வழிவகைகளை செய்யாமல், மறைகோட்டில் பயணித்து எல்லாவற்றையும் தம் சுயநலத்துக்காக பாழாக்குபவர்களாக விளங்குகிறார்கள். பின்னடைவுகளுக்கு வழிகாட்டுகிறார்கள். மாவீரர்கள் ஒவ்வொருவரும் இந்தத் தேசத்து தாய்மாரில் பிளவு காணவில்லை. மாவீரர்கள் ஒவ்வொருவரும் இந்த தேசத்தில் வாழ்ந்த சகோதர, சகோதரிகளில் பிளவு காணவில்லை. அவர்களுக்குத் தெரிந்ததும் போதிக்கப்பட்டதும், அவர்களின் சந்ததிக்கென்று ஒரு வாழ்விட நிலம். தமது இனம் வாழ்வதற்கு நிரந்தர விடுதலை. சுபீட்சமான எதிர்காலத்திற்குள் எமது மொழி, எமது இனம் உயரிய அடையாளத்தோடு, இந்த உலகப்பந்தில் மிளிர வேண்டும் என்பதே. ஒவ்வொருவரும் நெஞ்சத்தை தொட்டுச் சொல்லுங்கள், நாம் அவர்களின் உயரிய தியாகத்துக்கு என்ன கைமாறு செய்கிறோம்?

பேரினவாதிகள் காலத்துக்கு காலம் தமது நகர்வை தந்திரமாக மேற்கொண்டவண்ணமே இருக்கிறார்கள். நாம் இன்னும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கிறோம். காணாமல் போனவர்களை தேடிக்கொண்டிருக்கிறோம். எமது நிலம் இராணுவத்தின் வாழ்விடமாக மாறிக் கொண்டிருக்கிறது. தந்திரமாக இராணுவக் குடியிருப்புகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. தந்திரமாக வேலைவாய்ப்பு என்ற போர்வையில், பெரும்பான்மையை சேர்ந்தவர்கள் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் என்ற போர்வையில் குடியேற்றப்படுகிறார்கள். அண்மையில் விவசாயப் பங்கீட்டுக்காணிகள் என்ற நடவடிக்கையும் நிலமிழப்புக்கு காரணமாக வாய்ப்புள்ளது. வெளியில் வீதி அபிவிருத்தி, வீடமைப்பு என்ற நாடகங்களுக்குள் இந்த தந்திரங்கள் மறைக்கப்பட்டு தமது நகர்வை மேற்கொள்கிறார்கள்.

ஒரு பெரும் போராட்டக்காலத்துக்குள் எந்தவித வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கப்பெறாத காலத்தில், உள்ளூர் உற்பத்தியில் உயிர் வாழ்ந்த மக்களை கையேந்தும் வெட்கமற்ற சமுகமாக தொண்டு நிறுவனங்களும் சமுக சேவைகளும் மாற்றியுள்ளன. உயர்ந்த வாழ்வியலும் பண்பாடு, பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, மொழி வளர்ச்சி, விவசாய அபிவிருத்தி, காட்டுவளப் பாதுகாப்பு, விளையாட்டுத்துறை, மருத்துவத்துறை, நீதித்துறை, பாதுகாப்பென வாழ்ந்த சமுகம் போரற்ற காலத்தில் சின்னாபின்னமாகி சிதறுண்டு போகிறது. எனில், விடுதலைத்தாகத்தையும் அர்ப்பணிப்போடும் வழிகாட்டி, செயற்படக்கூடிய சீடர்கள் சுயநலமானவர்களாக மாறியது இந்த தமிழ்ச்சமுகத்துக்கு கிடைத்த சாபமானதா? இந்த சாபத்தில் இருந்து மீண்டெழுவது எப்போது?

பொது நலனுக்காக, இந்த ஒடுக்கப்பட்ட சமுகத்தின் அபிலாசைகளை உலகத்தின் திசைகளுக்கு வெளிப்படுத்திய, ஆயிரமாயிரம் மாவீரர்களின் விருப்பை மறந்து, ஒரு நாளில் மட்டும் அழுவதும், தொழுவதும் என ஒரு அடையாள தினமாக்கி நகரப்போகிறோமா?

யார் இந்த மாவீரர்கள்? எங்கள் சகோதரிகள், எங்கள் சகோதரன்கள், எங்கள் உறவுகள், எங்கள் நண்பர்கள்,எங்கள் உயி-ரோடும் உணர்வோடும் கலந்த விடுதலையின் தீபக்குறிகாட்டிகள்.

இந்த ஒப்பற்ற வீரர்களின் தியாகத்துக்கு நாம் என்ன கைமாறு செய்யப்போகிறோம்?

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதல் முதல் வீரச்சாவடைந்த லெப்டினன் கேணல். சங்கர் அவர்களின் நினைவாக, ஒரு பொது நாளில் மாவீரர் தினம் கொண்டாடப்படுகிறதே தவிர, மற்றும்படி ஒவ்வொரு நாளும் இந்த மண்மீட்புக்காக, நிரந்தர விடுதலைக்காக தம்மை ஈகம் செய்தவர்கள் பட்டியல் நீண்டு கொண்டேதான் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் மாவீரர்தித்தின் குமுறல்கள் நிறைந்த நாட்களே. விடுதலைத்தீ சுமந்தோர் பயணித்த நாட்களே. இந்த இன விடுதலைக்காக தம் முகத்தை மறைத்து தம் உயிரைத் தியா-கம் செய்தவர்களும் அடங்குகிறார்கள். கரும்புலிகளாக வெடித்து காற்றோடு கலந்தவர்களின் நினைவைச் சுவாசித்துக் கொண்டுதான் வாழ்ந்து கொண்டிக்கிறோம். கடலோடு கடலாக கலந்தவர்களும், எங்கள் கடலோடு தான் கலந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இனியாவது எமது சுயநலன்களை மாற்றி , விடுதலையின் நாட்களை விரைவு படுத்துவோமா? என்ன செய்யப்போகிறோம்?

**எங்கே எங்கே ஒருகணம் விழிகளை**
**இங்கே திறவுங்கள்.**
**ஒரு கணம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி**
**உறங்குங்கள்.**

திறக்கப்பட வேண்டியது மாவீரர்களை நினைத்திருக்கும் மனங்களே . மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட கல்லறைகளைத்தான் எதிரியால் அழிக்க முடியும். மாவீரர்கள் நிறைந்திருக்கும் ஒவ்வொரு தமிழனின் மனங்களில் நிறைந்த கல்லறைகளை அழித்துவிட முடியாது. மனங்களில் இருக்கும் கல்லறைகளில் இருந்து மாவீரர்கள் கேட்கிறார்கள்.

இந்தச் சமுகத்திற்கு நிரந்தர விடுதலையை எப்போது கிடைக்குமென. மனங்களை திறந்து பதிலளிப்போம். கல்லறைகளும் பேசும். மனக்கல்லறைகளை மனச்சாட்சியோடு பேச வையுங்கள்.

## சீன வர்த்தக...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவலையுடன் கூறுகின்றார்.

விவசாயத்துறை பெரிதும் பாதிக்கப்படும் என்கிற கவலை வேறு இந்தியாவிற்கு இருக்கிறது.

8 வழிசாலையில், மலைகளும், விவசாய நிலங்களும் சூறையாடப்படுகிறது.

கார்பொரேட் கம்பெனிகளின் இலாபத்திற்காக, மீத்தேன்-ஏதேன் எரிவாயு திட்டத்தினூடாக பல்லாயிரக்கணக்கான விவசாய நிலங்கள் தமிழகத்தில் பாழ்பட்டுப்போவது குறித்து கவலைப்படாத இந்திய நடுவண் அரசு, தேசிய நலன் குறித்து அக்கறைப்படுவது வேடிக்கையாயிருக்கிறது.

இந்திய தனது மனதை மாற்றிக் கொண்டால் எப்போதும் இக்கூட்டில் இணைந்து கொள்ளலாம் என்கிற அழைப்பும் நிலுவையில் உள்ளது.

ஜோ பைடன் அதிபராக பதவியேற்கும்வரை காத்திருக்குமா? இல்லையேல் அதானி, அம்பானி, அகர்வால்களின் பச்சை சமிக்ஜை வரும்வரை பார்த்திருக்குமா? என்பது தெரியவில்லை.

வர்த்தகம், சந்தை என்பதைத் தவிர, வேறெந்த நீண்ட மூலோபாயத்திட்டங்களை இந்த ஒப்பந்தமூடாக சீனா சாதிக்க முனை-கிறது என்பதை பார்க்க வேண்டும்.

அதன் வங்கிச் சேவைகளின் பெரும்பாலான பகுதிகளில் எண்மிய நாணயம் (Digital Currency ) பயன்பாட்டில் வந்துள்ளது. இது எண்மியப் பொருளாதாரத்தை நோக்கிய முதல்கட்ட நகர்வாகும்.

குறிப்பாக RCEP இன் 15 நாடுகளுக்கிடையிலான வர்த்தகமும், அதற்குரித்தான பணப்பரிவர்தனையும் (Financial Clearance ) அந்தந்த நாடுகளின் எண்மிய நாணயத்தினூடாக நடைபெறக்கூடிய சாத்தியமுண்டு.

உலக வர்த்தக பொது நாணயமான அமெரிக்க டொலரினை பிரதியீடு செய்யும் வகையில் நிதியியல் கட்டமைப்பு மாறலாம்.

சீனாவின் நோக்கமும் அதுதான்.

இதுவரை அமெரிக்க டாலரில் வர்த்தகத்தை தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஊரசசநஉெல ளுறயி என்கிற நாணயப் பிரதியீடு முறைமை, எண்மிய யுகத்தில் நுழையும் வர்த்தகத்தில் வேறு வடிவம் பெறும் .

இந்த வர்த்தக கூட்டில் 18 மாதங்களின் பின்னர் எவரும் சேரலாம். அதற்கு முன்பாக ஆசியானிலுள்ள 6 நாடுகளும், ஏனைய 5 இல் 3 நாடுகள் இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் (ratify )அளிக்க வேண்டும் .

அப்போது ரஸ்யாவும் இணையலாம். சாங்கை ஒத்துழைப்பு கூட்டுத்தாபன (SCO) நாடுகளும் சேரலாம்.

பாதுகாப்பு குறித்த சீனாவின் கடும் போக்கானது, சிலவேளைகளில் ஜப்பான், தென் கொரியாவுடன் பிரச்சினைகளை உருவாக்கலாம். அதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் உண்டு.

இந்தோ-பசுபிக் என்பது மறுபடியும் ஆசிய- பசுபிக்காக மாறும் போல் தெரிகிறது.

# ஈழத் தமிழர் வரலாற்றை சிதைக்க அரசினாலும், புதையல் தோண்டுபவர்களாலும் அழிக்கப்படும் தொல்லியல் தடயங்கள்



அ.மயூரன், M.A.

ஈழத் தமிழினம் வரலாற்றைத் தொலைத்தவர்களாக, வரலாற்றை மறந்தவர்களாக, வரலாற்றுத் தேடலற்று, அறிவியல் தேடலோ, ஆர்வமோ அற்றாவர்களாக காணப்படுகின்றனர்.

ஓர் இனம் தன் வரலாற்றைத் தொலைத்து விட்டால் அதன் வாழ்வும், வளமும் அஸ்த்தமனமாகிவிடும். பொதுவாக ஈழத் தமிழினத்தில் இன்று காணப்படும் தலைவர்களும், புத்திஜீவிகளும் வரலாற்று அறிவற்று தமிழர் தாயகத்தை சிதைத்து, எதிரிகளின் கையில் கொடுக்கும் நிலையிற்தான் இன்று காணப்படுகின்றனர்.

ஈழத் தமிழினத்தின் தொன்மைமிகு வரலாறு தமிழர் தாயகத்தின் நிலப் பரப்புக்கள் எங்கும் பரவலாகப் புதைந்து கிடக்கிறது. இந்தத் தொல்பொருட்கள் ஈழத் தமிழர்களின் வரலாற்றை நிரூபிப்பதற்கான இறுதிச் சான்றாதாரங்களாக எம்மிடம் இருக்கிறன.

இந்தவகையில் 1917 ஆம் ஆண்டு கந்தரோடையை முதன்முதலில் ஆய்வு செய்த திரு.போல் பீரிஸ் அவர்கள் 1919 பெப்ரவரி 22 ஆம் திகதி டெய்லி நியூஸ் ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி முக்கியமானது.

“’ஐ hope the Tamil People will realise that in truth, there is buried in their sands> the story of much more fascinating development than they had hitherto dreamed” என்றார். அதாவது “இதுவரை கனவிலும் எண்ணிப்பார்க்காத தமது நாகரிகத்தின் கவரத்தக்க வளர்ச்சிக் கட்டடம் பற்றிய சான்றுகள் உண்மையகவே மண்ணுள் புதைந்திருப்பதை தமிழ் மக்கள் ஒரு காலத்தில் உணர்வார்கள் என நம்புகின்றேன்.” என்று சொன்னார்.

ஆனால் இத்தகைய பெறுமதி வாய்ந்த ஈழத்தின் மூத்தகுடிகள் நாம் என்ற வரலாற்றை உறுதிப்படுதும் தொல்பொருட்களை தமிழினத்தின் கையிலிருந்து தட்டிப்பறிக்கக் கூடிய வகையில் ஒருபுறம் அரச தொல்லியல் திணைக்களமும் மறுபுறம் புதையல் தோண்டும் குழுவினரும் அவற்றை நாசமாக்குகின்றனர்..

போருக்குப் பின்னர்தான் இத் தொல்லியல் தடயங்கள் புதையல் தோண்டுபவர்களால் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக விடு தலைப்புலிகள் காலத்தில் அதாவது 1980 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டுவரை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணப்பட்ட தொல்லியல் தடயங்கள் யாவும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டன. எங்கு தொல்லியல் தடயங்கள் இருக்கிறன என்று தெரிந்தும் அதனைப் பார்வையிட்டவர்கள் அதனைச் சேதப்படுத்தாது அப்படியே விட்டிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் பேரழிவின் பின்னர் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணப்பட்ட தொல்லியல் தடயங்களில் 90 வீதமானவை அழிக்கப்பட்டு விட்டன என்பது மட்டுமல்ல அவற்றை புதையல் தோண்டுகிறோம் என்ற பெயரில் தமிழ் மக்களே இவற்றை அழித்தனர் என்பதே வேதனைக்குரிய விடயமாகும்.

1980 களிலிருந்து 2009 வரை இத் தொல்லியல் தடயங்கள் பாதுகாக்கப் பட்டதனாற்தான் இன்று புதையல் தோண்டுபவர்களால் இவை எடுக்கப்படுவது மட்டுமல்ல இத்தடயங்களில் காணப்படும் பொருட்கள் கீழடிக்கு இணையாகவும் இருக்கின்றன என்ற உண்மையும் தெரிய வருகிறது.

குறிப்பாக வன்னியில் வவுனிக்குளம், பாண்டியன்குளம், கரும்புள்ளியான், கல்விளான் பகுதிகளில் 2019, 2020 காலப் பகுதில் ஆங்கங்கே எடுக்கப்பட்ட தடயங்கள் கீழடியையும் விஞ்சிநிற்கிறன. இதில் கல்விளான், கரும்புள்ளியான் பகுதியில் 2018 ஆம் ஆண்டு புதையல் தோண்டுபவர்களால் இங்கு கிடைக்கப்பட்ட சுடுமண் சிற்பங்களும், எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டும் வாசிக்க முடியாத அளவிற்கு தடயமே தெரியாமல் அழித்தொழிக்கப்பட்டு இருக்கிறது. அத்துடன் ஆங்காங்கே காணப்பட்ட கற்றூண்களை தூக்கிச் சென்று தங்களின் வீடுகளைக் கட்டுவதற்கு பயன்படுத்துவதையும் காணமுடிகிறது.

போரின் பின்னர் கல்லுடைக்கும் வியாபாரிகளால் வன்னியிலும், கிழக்கு மாகாணங்களிலும் சிறிய மலைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வாவெட்டி மலை, கல்நீராவி மலை என்பன கல்லுக்காக உடைக்கப்பட்டு அதிலிருந்த எழுத்துக்கள் தடயங்கள் தெரியாமல் அழிக்கப்பட்டன.

அதேபோல் திருகோணமலை , மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் குவிந்திருக்கும் தொல்லியல் தடயங்கள் 2009 வரை பாதுகாக்கப்பட்டிருக்க போர் முடிந்தபின்னர் சில புதையல் தோண்டும் முஸ்லிம் குழுக்களினால் அழிக்கப்படுகின்றன. இங்கு வேடிக்கை என்னவென்றால் புதையல் தோண்டுவதற்கென்றே குழுக்கள் இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தி பாரிய அளவில் இயங்குவதுதான். புதையல் தோண்டும் விடயத்தில் தமிழர்களின் தொல்லியலை அழிக்கின்றனர்.

அண்மையில் ஒரு குழு திருகோணமலையில் ஒரு தமிழரின் காணியில் புதையல் தோண்ட அதில் கி.பி.6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நான்கு சாடிகள் கண்டெடுக்கப்பட்டன. அந்த நான்கு முட்டிக்குள் நான்கு புட்டிகள் (குடுவை) காணப்பட்டன. அந்த வெளிப்பக்க முட்டிகளில் மேல்ப் பக்கத்தில் தாமரை படமும், அதன் நான்கு பக்கங்களிலும் நாகங்கள் அந்த முட்டிக்கு பாதுகாப்பாகவும் அதனையடுத்து சூலமும், வச்சிராயுதமும் காணப்பட. அந்த முட்டிக்குள்ளே உள்ள புட்டிகளில் வெளிப் பக்கத்தில் பாளி மொழியில் சில வாசகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதற்குள் மந்திரிக்கப்பட்ட நீரும் இருந்திருக்கிறது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட நான்கு சாடிகளில் மூன்று சாடிகளை அக் குழு உடைத்தும்விட்டது. எஞ்சிய ஒரு முட்டியை இந்த குழுவிலுள்ள மந்திரவாதிகள் மறைத்து வைத்துள்ளனர். பின்னர் வன்னியில் குளவி சுட்டானில் உள்ள ஒரு குடும்பம் புதையல்



தோண்டும் ஆசையில் இந்த மந்திரவாதிகள் குழுவைக்கொண்டு புதையலைத் தோண்ட ஆரம்பிக்க ஏற்கனவே திருகோண மலையில் இருந்து எடுத்த எஞ்சிய முட்டியை இங்கு மறைத்து வைத்துவிட்டு இம்முட்டி குளவிசுட்டானில் புதையல் தோண்டிய இடத்திலிருந்து எடுக்கப்பட்டதாக நாடகமாடிய மந்திர வாதிக்கள் அம்முட்டிக்குள் தங்கம் இருப்பதாகவும் இது பலகோடி பெறுமதி வாய்ந்ததாகவும் கூறி தமக்கு வெறும் ஒன்பது லட்சத்தை தந்துவிட்டு இம்முட்டிகுள் இருக்கும் தங்கத்தை விற்று எடுக்கும் காசை நீக்களே சந்தோசமாக எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறிச் சென்றுவிட்டது. இம்முட்டிக்குள் தங்கம் இல்லை என்று உணர்ந்த அந்த குடும்பம் காவல்துறையில் தம்மை அந்த மந்திரவாதிகள் ஏமாற்றிவிட்டதாக புகார் கொடுத்துள்ளது. இதை விசாரித்த காவல்த்துறையும் அந்த முட்டியை கைப்பற்றியதோடு. புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் அக்குடும்பத்தினரை கைது செய்தும் உள்ளனர்.

இதேபோலத்தான் அம்பாறை மாவட்டத்தில் சம்மாதுறையில் புதையல் தோண்டும் குழுவினரால் ஐம் பொன்னாலான 940 கிராம் கொண்ட தெய்வானையின் சிலை எடுக்கப்பட்டு இது சோழர் காலத்திற்குரிய தங்கச்சிலை என இரண்டு கோடிக்கு விலை பேசப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த தெய்வானை சிலை 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டுக்குரியவை. 1956 ஆம் ஆண்டு அம்பாறையில் சிங்கள, முஸ்லிம்களால் அழிக்கப்பட்ட முருகன் கோயிலின் சிலையாக அறியக்கிடக்கிறது, இச்சிலை இன்று சோழர் கால சிலை என பல கோடிகளுக்கு ஏலம் பேசப்படுகிறது. இங்கு நான் குறிப்பிட்டிருப்பது எமக்குக் கிடைத்தவற்றில் ஒரு பகுதிதான். யார் கண்ணிலும் படாமல் புதையல் தோண்டு பவர்களால் அழிக்கப்பட்ட தொல்லியல் தடையங்களோ ஏராளம்.

மேலும் இவ்வாறுதான் வடகிழக்கில் புதையல் தோண்டுபவர்களினால் தமிழர்களின் தொன்மையான வரலாறு அழித்தொழிக்கப்படுவதை அறியாமலே பல தமிழர்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காக திட்டமிட்ட தமிழர் வரலாற்று அழிப்புக்கு தம்மை பக்கபலமாக்குகிறார்கள் என்பதே துரதிஸ்டவசமானது. இதில் படித்த புத்திஜீவிகளும் உள்ளடக்கம்.

வடகிழக்கின் தொன்மை வரலாற்றை அறிதியிட்டுக் கூறக்கூடிய தமிழர் தொல்லியல் தடங்களைத் திட்டமிட்ட முறையில் கையகப் படுத்துவதிலும், ஆக்கிரமிப்பதிலும், சிங்கள பௌத்த பேரினவாத அரசு மும்முரமாகச் செயற்படுவதோடு தமிழர் தொல்லியலை சிங்களவர்களின் தொல்லியல் எனத் திரிபுபடுத்திக் காட்டி உண்மைக்குப் புறம்பான கற்பனையான சிருஸ்டிக்கப்பட்ட வரலாற்றியல் ஒன்றை சிங்கள தேசம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இதனை அறிவியல் பூர்வமாக சர்வதேச நியமங்களுக்கூடாக ஆக்கபூர்வ நடவடிக்கைகளை புலம்பெயர் வாழ் ஈழத்தமிழ் அறிஞர்கள் முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் வரலாற்றைத் தொலைத்த மக்கள் கூட்டமாக உலகப் பரப்பில் சிதறி வாழ்ந்து சிதைந்து போவோம் என்பது திண்ணம்.



## தமிழன்னையின் தனையனே வாழியவே

தமிழன் என்ற இனம்
தலைகளை நிமிர்த்த
தரணியில் உதித்தான்
தானைத் தலைவன் எங்கள் கோபுர கலசம்

சிற்றலைகள் கொஞ்சி விளையாடும்
சிறப்பான வல்வை மாநகரில்
சித்தங்குளிர் திருக்கார்த்திகையில்
சிறுத்தைபுலி இவன் திசைகள் வெளிக்க உதித்தான்

கற்கின்ற போதிலும் அண்ணன்
கருதினான் தமிழரை தமிழை
கடிதென முடிவெடுத்தே
கல்வியை உதறி களமாட புகுந்தான்

ஒற்றைத் துப்பாக்கியில் ஆரம்பித்து
ஒரு பெரும் படை அமைத்து
ஒப்பரும் மிக்காருமற்ற தலைவனாய்
ஒன்றாக்கினான் ஒடுங்கியிருந்த தமிழரை

கொடிகொண்ட மன்னவனே கரிகால் சோழனே
கொடிய சிங்களம் அஞ்ச கோலோச்சிய கோணமலையரசே
கோமகனே எங்கள் கோல விடிவிளக்கே
கோடிமுறை சொல்வோம் வாழ்க வாழ்கவே

தமிழரின் விடி வெள்ளியே
தரணியில் இணையற்ற தலைவயே
தமிழன்னையின் தனையனே வாழியவே
தலைதாழ்த்தி வாழ்த்துகின்றேன் வாழியவே வாழியவே

**- குலசேகரம் சதீஷ் -**

## மாவீரர்

அண்ணன் நெறிநின்று துப்பாக்கி ஏந்தியே
மண்ணினைக் காத்தவர் மாவீரர்– எங்கள்
மண்ணுறை மக்களின் துன்பங்கள் நீக்கவே
இன்னுயி ரீந்தவர் மாவீரர்

இதயத் தெழுந்திட்ட சுதந்திர தாகத்தால்
சமர்க்களம் புகுந்தவர் மாவீரர் – பெரும்
அதிசயத் தோடிந்த அகிலமும் வியக்கவே
அதிரடி தொடுத்தவர் மாவீரர்

சிங்கள இராணுவம் சிதறியே யோடிச்
செருக்களம் துளைத்தவர் மாவீரர்– அவர்
எஞ்சிடா வண்ண மழித்தனல் மூட்டியே
சரித்திரம் படைத்தவர் மாவீரர்

சொந்தங்கள் பந்தங்கள் யாவும் அகற்றியே
மக்களைக் காத்தவர் மாவீரர்– தமிழ்ச்
சந்ததி வாழ்ந்திடச் சாதனை யாலருஞ்
செயல்கள் புரிந்தவர் மாவீரர்

மண்கிண்டி மலையினில் படைத்தளம் தகர்த்தருஞ்
சாதனை படைத்தவர் மாவீரர்– உடன்
பெண்கள் அணியொடு கடற்புலி யிணைந்தந்தக்
கிளாலியை வென்றவர் மாவீர்

பருத்தித் துறைக்கரைச் சமுத்திர வெளியினில்
டோறா தகர்த்தவர் மாவீரர் – பகை
உருத்தெரி யாமலே பெருமிழப் பெய்திடச்
சாதனை படைத்தவர் மாவீரர்
தானைத் தலைவனின் ஆணை சுமந்தன்று
தம்மினம் காத்தவர் மாவீரர்– நெஞ்சில்
மானம் பெரிதென வுணர்ந்தத னாலுயிர்
அர்ப்பணித் தழிந்தவர் மாவீரர்

அனுரத புரியினில் விமானத் தளமொரு
இரவினிற் றகர்த்தவர் மாவீரர் – அவர்
நினைத்திடற் கரியபல் சாதனை யாலுயர்
உச்சியில் ஒளிர்பவர் மாவீரர்

உலகவல் லரசினர் ஒன்றுபட் டிழைத்திட
சதியினா லழிந்தவர் மாவீரர் – இன்று
மகிமையி னுச்சியில் மாவீர ரென்றென்றும்
மக்களி னொளியினிற் துலங்குகின்றார்

**-கவிஞர் மாரீசன்**

**எழிலன் - தமிழ்**

கொலை நிலங்கள் (Killing Fields) எனப்படும் இத்திரைப்படம் கம்போடியாவில் கமருச் இயக்கத்தின் கை ஓங்க தொடங்கிய 1973 தொடக்கம், அவர்கள் அங்கு ஆட்சி அதிகாரங்களிலிருந்து விரட்டப்பட்ட 1979 காலப்பகுதியை மையமாக கொண்டு நகர்கிறது

கம்போடிய தேசிய இராணுவம் கமருச் இயக்கத்தினருடன் கடும் மோதலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மே 1973 இல் கதை ஆரம்பிக்கிறது. கம்போடிய செய்தியாளரும் அமெரிக்க செய்தித்தாளான "நியூயோக் டைம்சின்" மொழிபெயர்ப்பாளருமான பரன் அமெரிக்க ஊடகவியலாளர் சிட்னி என்பவரின் வருகைக்காக விமான நிலையத்தில் காத்திருக்கிறான். விமானம் சற்று தாமதமாகிவிடுகிறது. அந்த ஊடகவியளார் கம்போடிய விமானநிலையத்தை வந்தடையும் தருணத்தில் திடீரென கிடைத்த இரகசிய செய்தியை அடுத்து பரன் அங்கிருந்து அகன்று விடுகிறான். மொழிபெயர்ப்பாளர் இன்மையால் பல சிரமத்துக்கு மத்தியில் சிட்னி தான் தங்கும் விடுதியை சென்றடைகிறார்.

1975. இப்போது போராளிகளின் கை ஓங்குகிறது. கம்போடியாவின் தலைநகரை அவர்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றனர். இன்நிலையில் சர்வதேச தூதரகங்கள் அங்கிருந்து வெளியேற தாயராகின்றன. சிட்னி தன்னுடன் பணியாற்றும் பரனை அவனது பரனை தூதரகம் திருப்பி அனுப்புகிறது.

சில மாதங்களின் பின் அமெரிக்காவிலிருந்து சிட்னி பரனை தேடும் முயற்சியில் கடுமையாக ஈடுபடுகிறார்.

கம்போடியாவில் கமருச்களின் ஆட்சி கொடூரத்தின் உச்சத்தை தொடுகிறது. சமூகத்தின் புத்திஜீவிகள் கடைந்தெடுக்கப்பட்டு கமருச்களால் கொல்லப்படுகின்றனர். சிறுவர்கள் ஆயுத பாணிகளாக்கபட்டு எதிர்ப்பவர்களை அழிக்க பயன்படுத்தபடுகின்றனர். அனைத்து குடிமக்களும் பண்ணை அடிமையாக்கபடுகின்றனர். இப்படிய யொரு பண்ணையில் ஒரு வேலையாளாக பரனும் தப்புவதற்கு நேரம் பார்த்து காத்திருக்கிறான். ஒருவாறு தப்பியும் விடுகிறான்.

கமருச்களின் திறமையின்மையால் வாழ்வாதரங்கள் சீரளிந்து போகிறது. எங்கும் வறுமை.

இதே நேரம் அமெரிக்காவில் சிட்னிக்கு 1976ம் ஆண்டுக்கான சிறந்த பத்திரிகையாளருக்கான விருது கம்போடிய செய்தி சேகரிப்புக்காக கிடைக்கிறது. அந்த வைபவத்தில் பரனின் தியாகத்தை அமெரிக்க மக்கள் புரிந்து கொள்கின்றனர்.

தெருவாரம் மயங்கி கிடந்த பரனை அந்த பிரதேசத்து பொறுப்பாளர் கண்டெடுத்து தமது முகாம் வேலைகளுக்கு பயன்படுத்துகிறார். ஒரு வாடகை ஊர்திச்சாரதி என தன்னை அவன் அறிமுகப்படுத்துகிறான். அந்த முகாமில் வளரும் பொறுப்பாளரின் குழந்தையை அவன் அன்பாக கவனித்துக்கொள்ள தொடங்குகிறான். இதனால்



# கொலை நிலங்கள்

குடும்பத்தோடு கம்போடியாவை விட்டு பாதுகாப்பாக வெளியேறுமாறு கூறுகிறார். ஆனால் அவனோ குடும்பத்தை வெளியேற்றிவிட்டு அவருடன் தொடர்ந்தும் தங்கியிருக்கிறான்.

கமருச் இயக்கம் தலைநகருக்குள் பிரவேசிக்கிறது. கமருச்சினர் முதல் ஓரிரு நாட்கள் மக்களுடன் சகஜமாக பழகுகின்றனர். நாட்டில் சாதகமான ஒரு மாற்றம் உருவாகியது போன்ற ஒரு தோற்றம் ஏற்படுகிறது. ஆனால் திடீரென எல்லாம் மாறுகிறது. கமருச் போராளிகள் சிட்னியையும் வேறு சில வெளிநாட்டவரையும் கைதுசெய்து, அவர்களை பலாத்காரமாக கவசவாகனத்துள் ஏற்றுகின்றனர். பரன் அவர்களுடன் தன்னையும் ஏற்றுமாறு கமருச்சை வேண்டுகிறான். முதலில் மறுப்பவர்கள் பின்னர் இலஞ்சத்தை பெற்றுக்கொண்டு அவனையும் கொண்டு செல்கின்றனர்.

கவசவாகனம் ஓரிடத்தில் நிற்கிறது. அவ்விடத்தில் பலரை போராளிகள் சுட்டுக்கொல்கின்றனர். இந்த வெளிநாட்டவரையும் சுட தயாராகும்போது பரன் அவர்களின் பொறுப்பாளரிடம் பலமணிநேரம் விவாதித்து இவர்களை மீட்கிறான்.

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நகரிலிருந்து வெளியேறி பிரான்சு தூதரகத்தில் தஞ்சமடைகின்றனர். இவர்களுடன் பரனும் சிட்னியும் அங்கேயே தங்குகின்றனர். நாட்டு நிலமை நாளுக்கு நாள் மோசமடைகிறது. அனைத்து கம்போடிய பிரசைகளையும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென கமருச் தூதரகத்திடம் கோருகிறது. அச்சமடைந்த தூதரகம் வெளிநாட்டு கடவுச்சீட்டுடையோர் தவிர மீதி அனைவரும் அங்கிருந்து வெளியேற்றுகிறது. பரன் தூதரத்தை விட்டு வெளியேறும் பட்சத்தில் அவன் கொல்லப்படவோ அல்லது சிறைதண்டனையை அனுபவிக்கவோ வேண்டிவரும் என்பதை சிட்னி உணர்கிறார். உடனடியாக ஒரு போலி கடவச்சீட்டை தயாரிகிறார். ஆனால் பரனின் படம் வெளிறிவிடுவதால் அது பயனற்று போகிறது. இன்நிலையில் பொறுப்பாளருக்கும் அவனுக்குமிடையில் சிறு நெருக்கம் ஏற்படுகிறது.

அவன் நன்கு படித்தவன் என்பது காலப்போக்கில் தெரிய வருகிறது. இதனிடையே கம்போடியவுக்கும் வியட்நாமிற்குமிடையிலான பழைய நிலத் தகறாறு யுத்தமாக வெடிக்கிறது. கமருச்களின் பேயாட்சி, வறுமை, யுத்தம் என் பல சுழல்களில் கம்போடிய மக்கள் சிக்கி தவிக்கின்றனர். கட்டுமீறிய மனித படுகொலைகளால் கமருச் இயக்கத்தின் மீது பரனின் முகாம் பொறுப்பாளர் கூட வெறுப்படைகிறார்.

"நான் இந்த நாட்டை நேசிக்கிறேன். இதற்காக நான் எல்லாவற்றையும் இழந்திருக்கிறேன். புரட்சிக்காக எனது மனைவி இறந்தாள், ஆனால் இயக்கத்தின் தலைவர்கள் மக்களை நம்புகிறார்களில்லை. இதனால் நானும் இயக்கத்தை நம்பவில்லை. எதிர்காலத்தை பயத்துடனே எதிர்நோக்குகிறேன். நீதான் எனது குழந்தையை பார்த்து கொள்ள வேண்டும்." என பரனிடம் தனது குழந்தையையும், நாட்டைவிட்டு தப்பும் வழிகளையும் அறிவித்துவிட்டு, கொலைகளை நிறுத்த முயற்சிக்கிறார். ஆனால் வெறிபிடித்த கமருச்களால் அவரும் கொல்லப்படுகிறார்.

பரன், பொறுப்பாளரின் குழந்தையையும் சிலரையும் அழைத்துக்கொண்டு காடுகள் வழியாக தாய்லாந்தை நோக்கி செல்கின்றான். வழிநெடுகிலும் ஆபத்துக்கள். இறுதியாக பொறிவெடியில் சிக்கி குழந்தை இறந்தவிடுகிறது. ஒருவழியாக பரன் தாய்லாந்து எல்லையிலுள்ள செஞ்சிலுவை சங்க முகாமை காண்கிறான்.

இறுதிக்காட்சில் சிட்னி தனது பத்திரிகை அலுவலகத்திற்கு பரன் தொடர்பு கிடைத்த செய்தியை அறிவிக்கிறார். தாய்லாந்து முகாமில் பரனை பார்க்க ஒரு அமெரிக்கர் வந்திருப்பதாக தெரிவிக்கபடுகிறது. முகாமின் வாசலில் சிட்னி காத்திருக்கிறார். பரன் ஓடிவருகிறான். இருவரும் கட்டி அணைத்துக்கொள்ள திரைப்படம் முடிகிறது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com







# பொம்பியோவின் விஜயமும் ஈழத் தமிழர் நிலைப்பாடும்

தி. திபாகரன்

இரண்டாம் உலகப் போர் எவ்வாறு இன்றைய உலக ஒழுங்கை கட்டமைப்பு செய்ததோ அவ்வாறே கொரோனா என்கின்ற உயிர்க்கொல்லி நோய் இந்த உலக ஒழுங்கை கொரோனாவுக்கு பின்னா உலக ஒழுங்காக கட்டமைப்புச் செய்யப் போகின்றது.

கொரோனாவுக்கு பின்னான உலக ஒழுங்கின் முதல் காலடி எடுத்து வைப்பாக அமெரிக்காவின் இரண்டாவது அதிகாரம் படைத்த பதவி வகிக்கக்கூடிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் (United states Secretary of State) மைக் கொம்பியோ (Mike Pompeo) இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கு இன்றைய நெருக்கடியான சூழலில் ராஜரீக பயணத்தை மேற்கொள்வது என்பது இந்தப் பிராந்தியத்தில் உள்ள அரசியல் பொருளியல் அதிகாரப் போட்டியின் கொதிநிலையின் உச்சத்தை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்காவின் "இந்தோ - பசுபிக் பிராந்திய" அரசியல் புவியியல் ( Political Geogaphy) நலனும்" இந்தியாவினுடைய "புவிசார் அரசியல் (Geopolitics) நலனும்" இணைதிருக்கின்ற ஒரு சந்தியில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் எதிர் காலத்தை தீர்மானிக்கின்ற பயணமாகத் தான் அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் இலங்கை பயணம் அமைகின்றது.

இற்றை வரையான காலத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் கேந்திர தன்மையையும், இந்தியப் பாது காப்பு சார்ந்த இந்தியாவின் புவிசார் அரசியலையும், அகன்ற இந்து சமுத்திரம் சார்ந்த வகையில் இந்தியாவின் அரசியல் - பொருளியல் -இராணுவ நலனையும் இந்தியாவால் ஓரளவு கையாளக் கூடியதாக இருந்தது.

ஆனால் இந்நிலைமையை இன்று சீனா உருவாக்கியிருக்கும் புதிய அரசியல் புவியியல் (Political Geography) மாற்றியமைத்துவிட்டது. இந்தியாவின் கையை மீறி சீனாவின் அரசியல் புவியியல் இந்து சமுத்திரத்தில் நுழைந்துவிட்ட நிலையில் இந்தியா இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னை பலப்படுத்த அமெரிக்க வல்லரசுடன் கூட்டணியை உருவாக்க வேண்டிய அவசியம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தோன்றியுள்ளது.

உலக அரசியல் போக்கில் ஒவ்வொரு நாடுகளும் தங்கள் புவிசார் அரசியலில் இருந்து தங்களைப் பாதுகாக்க முடியாத நிலமை ஏற்படுகின்றபோது இயற்கையாக இருக்கின்ற அமைப்புக்களோடும் நிகழ்வுகளோடும் கூடவே தமது தேவைக்கேற்ப செயற்கையான மாற்றங்களை அரசியல் ரீதியாக புவியியல் அமைப்பின் மீது உருவாக்கி தமக்கான நலன்களை இலக்கு வைப்பதையே அரசியல் புவியியல் என்கிறோம்.

இயற்கையான புவியியல் அமைப்பின் படி சீனா ஒரு இந்து சமுத்திர நாடல்ல. அவ்வாறு இயற்கையாக இந்து சமுத்திரத்தில் ஒரு நாடாக அமையாத சீனா தற்போது அரசியல் புவியியல் மீது அதனால் ஏற்படுத்தப்பட்டுவரும் மாற்றத்துக்கு ஏற்ப இன்று அது தன்னை ஒரு இந்து சமுத்திரப் பிராந்திய நாட்டுக்குரிய நிலைக்கு உரியதாக்கி வருகிறது.

அதாவது இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் பாகிஸ்தானிலுள்ள குவாதர் துறைமுகத்தையும் மற்றும் மியன்மாரில் அமைந்திருக்கும் கோகோதீவுகளையும் இலங்கைத்தீவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் சீனா தனது பிடிக்குள் கொண்டு வந்திருப்பதன் மூலம் இந்து சமுத்திரத்தின் பின்தள நாடாக சீனா இன்று தன்னை ஆகிக்கொண்டுவிட்டது.

அது எப்படியெனில் இயற்கையான புவியியல் அமைப்பினால் சீனா ஒரு இந்து சமுத்திர நாடல்லாத நிலையில் இந்து சமுத்திர நாடான பாகிஸ்தானில் உள்ள குவாதர் துறைமுகத்தோடு சீனாவை இணைக்கும் வகையில் சீனாவில் இருந்து நேரடியாக பெருந்தெரு ஒன்றை அமைத்து அது சமுத்திரத்துள் நுளைக்கிறது. அவ்வாறு மியான்மாரின் கோகோ தீவிலிருந்து நிலக்கீழ் வழியாக எண்ணெய் குழாய்களை அமைத்து சீனாவுக்கு நேரடியாக எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது. சீனாவின் இவ்விரு அரசியல் பொருளியற் செயற்பாடுகளும் இந்தியாவின் புவிசார் அரசியலை புறந்தள்ளி சீனாவுக்கான புதிய அரசியல்ப் புவியியல் சூழலை உருவாக்கி இந்து சமுத்திரத்தில் சீனா ஆளுகை செய்ய தொடங்கிவிட்டது.

அத்தோடு இலங்கையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு பெற்றுக் கொண்டதோடு கொழும்பில் கடல் நகரம் ஒன்றையும் மிகப் பிரமாண்டமான அளவில் சீனா மேற்கொண்டு வருகிறது. இங்கே குவாதர் - அம்பாந்தோட்டை - கொக்கோ தீவுகள் என்ற மூன்று புள்ளிகளை இணைத்து அமைக்கப்படும் வலையமைப்பு இந்து சமுத்திரத்தில் இந்தியாவை வளைப்பதாய் காணப்படுகிறது. இதன் மூலம் இந்தியாவை முற்றுகைக்குள் வைக்கக்கூடியதான இராணுவப் பலம்வாய்ந்த ஒரு புதிய அரசியற் புவியியலை சீனா தோற்றுவித்திருக்கிறது.

சீனா தனது அரசியல் பொருளாதார பலத்தின் மூலம் சேர்க்கையாக உருவாக்கியிருக்கும் இந்து சமுத்திர அரசியற் புவியியல் முற்றுகையை உடைத்து இந்து சமுத்திரத்தில் இந்தியா தனது இராணுவ கேந்திர புவிசார் நலனையும் பரந்த இந்து சமுத்திரப் பிராந்திய புவிசார் நலனையும் தக்கவைக்க வேண்டுமென்றால் அமெரிக்காவின் இந்தோ பசுபிக் பிராந்திய அரசியல் நலனை அனுசரித்து கூட்டு இணைந்தால் மட்டுமே அது சாத்தியமாகும் என்ற நிலை உருவாகி உள்ளது.

இந்தப் பின்னணியிற்தான் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர் இந்தியாவிற்காகவும் பேசவருகிறார் என்பது புலனாகும். அதாவது இலங்கை விடயத்தில் இந்திய அரசு பேச முற்படும் விடயங்களை சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் இந்திய எதிர்ப்பு வாதத்தினால் இலகுவாக எதிர்கொண்டுவிடுவர். இந்நிலையில் அமெரிக்காவுக்கு ஊடாக தனது நிலையை இலங்கையில் உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இந்திய ஆட்சியாளர்களுக்கு உண்டெனத் தெரிகிறது.

பண்டைய நாட்களில் கிமு இரண்டாம் நூற்றாண்டில் சீனாவை பாதுகாக்க உருவாக்கப்பட்ட 21,196 கி மீ. நீளமான சீனப்பெருஞ்சுவர் ஒரு அரசியல் புவியியல் ஏற்பாடாகும். பனாமா கால்வாய், சுயஸ் கால்வாய், இன்று அமெரிக்கா கட்டமுனையும் மெக்சிகோ சுவர், இந்தோ - பசுபிக் பிராந்தியம், இலங்கையில் கிழக்கு மாகாணம் மற்றும் மணலாறு ஆகிய பகுதிகளுக்கான சிங்களக் குடியேற்றம் என்பனவெல்லாம் அரசியல் புவியியல் என்கின்ற விளக்கத்துக்குள் உள்ளடக்கப்படகூடியவை அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர் இந்தோ - பசிபிக் பிராந்திய நாடுகளான மாலைதீவு, இந்தோனேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளுக்கு இன்றைய காலத்தில் பயணம் செய்வது என்பதை ஈழத் தமிழர் கூர்ந்து கவனித்து செயற்பட தயாராக வேண்டும். இந்து சமுத்திரத்தில் நிகழப்போகும் மாற்றங்களுக்கான கட்டியம் கூறலாகவே இதனை நோக்கவேண்டும்.

ஒக்டோபர் 28 ஆம் திகதி இலங்கைக்கு ராஜாங்க விஜயத்தை மேற்கொண்டு இருக்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் பயணம் மற்றும் அமெரிக்காவின் விருப்பிற்கு எதிராக இலங்கை வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகள் பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களை முன் கூட்டியே கூறத் தொடங்கிவிட்டனர்.

அமெரிக்க அமைச்சரின் பயணத்தின் நோக்கம் சீனாவை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இருந்து ஓரம் கட்டுவதற்கான செயற்திட்டம் என்பதனை சிங்களதேசம் புரிந்து கொண்டிருக்கிறது. தற்போது சீனாவை இலங்கையை கைவிடத் தயாரில்லை. அதே நேரத்தில் இந்தியாவை அணைக்கவும் அது உண்மையில் உள்ளார்ந்த அர்த்தத்தில் தயார் இல்லை.

ஏனெனில் இற்றை வரையான காலத்தில் இலங்கையில் இருந்து வந்த இந்தியாவினது புவிசார் அரசியலின் மேலாண்மை தற்போது கீழ்நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. அது எப்படியெனில்

1) இலங்கையின் வடகிழக்கில் உள்ள தமிழர்களே இந்தியாவின் பலம். அந்தப் பலத்தை கிழக்கில் மேற்கொள்ளும் சிங்கள குடியேற்றங்களின் மூலம் நிலத்தை கபளீகரம் செய்துவிட்டது.
2) அடுத்து வடக்கின் எல்லையோரப் பகுதிகளை புதிய குடியேற்றங்கள் மூலம் கபளீகரம் செய்ய தொடங்கிவிட்டது.
3) ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தையும் படு மோசமாக இனப்படுகொலை செய்து தோற்கடித்துவிட்டது
4) சீனா உருவாகியிருக்கும் குவாதர்- அம்பாந்தோட்டை- கோக்கோ தீவுகள் ஆகியவற்றை இணைத்து இந்தியாவை முற்றுகைக்கு உள்ளாகியுள்ள சீனாவின் புதிய அரசியல் புவியியல் வியூகமானது, இலங்கைக்கு புதிய தெம்பையும் உற்சாகத்தையும் கொடுத்து இருக்கிறது. இப்பின்னனியிற்தான் இன்றைய இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவையும் அமெரிக்காவையும் எதிர்த்து துணிச்சலாக கருத்துக்களை முன்வைக்கத் தொடங்கிவிட்டனர்.

முள்ளிவாய்க்கால் யுத்தத்தை பயன் படுத்தி இலங்கையில் சீனா ஆழமாக வேரூன்றிவிட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# சகோதரர்களின் இயலாமை

தேசிகன்

சிறிலங்காவில் கடந்த வாரம் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகள் ஆட்சியில் இருக்கும் ராஜபக்ஷ சகோரர்களின் 'அரசியல் இயலாமையை' அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

நாட்டின் தேசிய பாதுகாப்பையும், சிங்கள பௌத்த கடும்போக்கு வாதத்தினையும் கையிலெடுத்து கடந்த 2019 நவம்பரில் ஆட்சிப் பீடமேறியவர் கோட்டாபய. அவர் பதவிக்கு வந்து முதலாவது ஆண்டு நிறைவடைந்திருக்கின்றது.

சிறிலங்காவில் கொரோனாவின் கட்டுறாத நிலையால் தனது அரசியல் வெற்றியை பெருமெடுப்பில் கொண்டாட முடியாத நிலையில் அவர் இருந்தார். இதனால் தொலைக்காட்சி வாயிலாக விசேட உரையொன்றை நாட்டு மக்களுக்கு ஆற்றினார்.

கொரோனா நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் சாதாரண மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாவின் உரை 'நிவாரணங்களை' வழங்குவதாக இருந்திருக்கவில்லை. அது பெருவாரியானவர்களுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

தனது முதலாவது ஆண்டு காலத்தில் தான் செய்த வீரதீர செயல்களை முன்னிலைப்படுத்தியும், வாக்குறுதி அளித்து செய்ய முடியாது போன விடயங்களுக்கு அரசியல் வாதிகளைப்போன்று காரணங்களையும் கூறியிருந்தார்.

2009 இற்கு பின்னர் ராஜபக்ஷவினருக்கு போர் வெற்றிவாதம் ஆட்சி அதிகாரத்தினை தக்கவைப்பதற்கான தீனியைப் போட்டுக்கொண்டிருக்கின்றது. இது வெளிப்படையான விடயம். ஆனால் கோட்டாபய, தன்னிலையை தக்கவைப்பதற்காக போர் வெற்றிவாதத்திற்கும் அப்பால் சென்றிருக்கின்றார். அதுவே அவருடைய முதலாவது ஆண்டு உரையின் சாரம்சம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் கோட்டாபய ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு இலகுவாக வழியமைத்துக் கொடுத்தது. அந்தக்காலத்திலிருந்தே 'நாட்டின் தேசியப் பாதுகாப்பு' என்பதையே பிரதான பொருளாக பேச ஆரம்பித்திருந்தார்.

தற்போது ஒருவருட ஆட்சிக்காலமும் நிறைவடைந்திருக்கின்றது. இன்னமும் தேசிய பாதுகாப்பு விடயத்தினையே அவர் முன்னிலைப்படுத்துகின்றார். அதன் ஊடாக தான் 'தேசப்பற்றாளன்' என்று பெரும்பான்மை சிங்களவர்களுக்கு சேதி சொல்லியிருக்கின்றார்.

தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்புத்துறை கட்டமைப்புக்கள் மீளவும் கட்டியெழுப்பப்பட்டுவிட்டதாகவும் கோட்டாபய தனது உரையில் முதன்மைத் தானம் வழங்கி குறிப்பிட்டிருந்தார்.

சமகால பூகோளச் சுழலில் சிறிலங்கா மீது வேறெந்தவொரு நாடும் படையெடுக்கப் போவதில்லை. உள்நாட்டிலும் ஆயுதப்போராட்டம் உருவெடுக்கப்போவதும் இல்லை.

ஆகவே கோட்டாபயவினுடைய தேசிய பாதுகாப்பின் பலம், பலவீனத்தின் அளவுகோலை தற்போதைக்கு கணிப்பிடவே முடியாது.

இன்னொரு சம்பவம் இடம்பெறும் வரையில் சிங்கள தேசியவாதிகளிடத்தில் அவருடைய தேசியபாதுகாப்பு பீடிகை நம்பிக்கைக்குரியதாகவே இருக்கப்போகின்றது. அது அவருடைய ஆட்சி அதிகாரத்தினையும் உறுதிப்படுத்தத்தான் போகின்றது.

தான் சிங்கள பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்டமை, மற்றும் பௌத்த தேரர்களுடன் மாதமொருமுறை ஆலோசித்தே செயற்படுகளை முன்னெடுக்கின்றமை ஆகிய இரண்டு விடயங்களுக்குமே கோட்டபாய தனது உரையில் இரண்டாவது முக்கியத்துவம் அளித்திருந்தார்.

இந்த வெளிப்பாடுகள் மூலம், தான் சிங்கள பெரும்பான்மை இனமக்களுக்கே உரித்தானவர் என்பதையும், தன்னையொரு பௌத்த மேலாதிக்கவாதி என்பதையும் அவர் பிரதிபலித்திருக்கின்றார்.

பௌத்த பீடங்களை கைக்குள் போட்டு வைத்திருப்பதன் மூலம் தனது பதவிக்கு எவ்விதமான பங்கமும் ஏற்படாது என்பது கோட்டாவின் அரசியல் கணக்காக இருக்கலாம். ஆனால் சிறிலங்கா ஒரு பல்லினத்துவ நாடு. இங்கு சிங்களவர்களை விடவும் ஏனைய பூர்வீக சமூகங்களும் இருக்கின்றன என்பதை அவர் மறந்துவிட்டார்.

இந்த நிலைமையானது, தமிழர்கள் உள்ளிட்ட ஏனைய இனத்தினர் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்தப்படுகின்றனர் என்பதை முழு உலகிற்கும் அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது. இதனை கடும்போக்குச் சிந்தனையாளரான கோட்டாபய உணர்ந்திருக்க வாய்ப்பில்லை.

இனப்பிரச்சினையே இல்லையென்றும், வேலையில்லாப் பிரச்சினையே இருக்கின்றது என்றும் கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டவர் கோட்டபாய. அவ்விதமான ஒருவரிடத்தில் சிறுபான்மை சமூகங்கள் எதிர்பார்ப்புக்களை கொள்வதே வீணானது.

ஆனால், தனது அதிகாரப்பரப்பினை விஸ்தரிப்பதற்காக, தான் எல்லோருக்கும் ஜனாதிபதி என்று ஒருவருடத்திற்கு முன்னதாக ருவன்வெலிவிசாயவில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் அவர் கூறியதை இப்போது மறந்திருக்கலாம். ஆனால் தமிழ் பேசும் சமூகம் மறக்கவில்லை.

ஆகமொத்ததில் கோட்டாபய, தன்னுடைய 'அரசியல் ஆளுமை' இன் இயலாமையை மறைப்பதற்காக தேசியபாதுகாப்பு, சிங்கள பௌத்த தேசியவாதம், கொரோனா ஆகிய சொற்பதங்களை கனகச்சிதமாக தனது உரையில் பயன்படுத்தி பெரும்பான்மை சமூகத்தை மயிலிறகால் வருடிக்கொடுத்திருக்கிறார்.

இந்தப்புரிதல் தமிழர்களும், முஸ்லிம்களும், மலையகத்தமிழர்களும் நன்றாகவே உள்ளது. அவ்விதமான புரிதலொன்று தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு உருவாக இன்னும் சில காலமெடுக்கலாம்.

தம்பியாரின் நிலைமை இவ்வாறிருக்க, தமையனார் பிரதமர் மஹிந்த. அவர் சிறிலங்காவின் 75ஆவது வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பித்திருந்தார். ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பொதுஜனபெரமுன கட்சியின் கன்னி வரவு செலவுத்திட்டம்.



முன்னாள் நீதி அமைச்சர் ரொனி டி மலுக்கு (12தடவை) அடுத்தபடியாக 11ஆவது தடவையாக 75 வயதான மஹிந்த வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பித்தார். வழமையாக கம்பீரமாக நின்று உரையாற்றும் மஹிந்தவால் இம்முறை அவ்வாறு செய்ய முடிந்திருக்கவில்லை. உடல் தளவடைந்திருந்தது.

வெறுமனே 51 பக்கங்கள் கொண்ட இந்த வரவு செலத்திட்டத்தினை அவரால் நின்றவாறு முழுமையாக வாசித்திருக்க முடிந்திருக்கவில்லை. இடைவெளிகோரினார். பின்னர் அமர்ந்து வாசித்தார்.

ஒருகட்டத்தில் மஹிந்த எப்படியாது வாசிப்பை பூர்த்திசெய்துவிடவேண்டும் என்ற நிலைமையும் ஆளும் தரப்பிடத்தில் காணப்பட்டது. இவ்விதமாக தளர் நிலையில் மஹிந்த சமர்ப்பித்த இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மீது சிறிலங்காவின் அனைத்து தரப்பினதும் எதிர்பார்ப்பு அதிகமாகவே இருந்தது.

அந்த எதிர்பார்ப்புக்கான அடிப்படைக் காரணம் கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளே. சாதரண மக்கள் முதல், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் என்று அனைவருமே முடங்கியிருக்கும் நிலையே தற்போதுள்ளது.

அவ்வாறான நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு செலவுத்திட்டம் ஏமாற்றத்தினையே அளித்துள்ளது. இந்த வரவு - செலவுத்திட்டத்தின் மொத்த வருமானம் 1961 பில்லியன் ரூபா, செலவீனம் 3525 பில்லியன் ரூபா. துண்டு விழும் தொகையாக 1564 பில்லியன் ரூபா.

வழமைக்கு மாறாக துண்டுவிழும் தொகை, 45 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு கொரோனா பதிப்பால் நிவாரணங்கள் வழங்க வேண்டியுள்ளதாக காரணம் கூறப்பட்டிருக்கின்து.

சிறிலங்காவின் சர்வதேச கடன்களின் தொகை 35.4 பில்லியன் டொலர்கள். இதில் இவ்வருடத்துக்கு மட்டும் 4.5 பில்லியன் டொலர்களை செலுத்தவேண்டியுள்ளது. அதேபோன்று 6700 பில்லியன் ரூபா உள்நாட்டு கடன்களும் உள்ளன.

இந்த கடன்களை செலுத்துவற்கு அப்பால் இவற்றுக்கான அடுத்த தவணை வட்டியை எவ்வாறு செலுத்தப்போகின்றது என்பது புரியாத புதிராகவே உள்ளது. இதனைவிடவும் பொாருளாதார வளர்ச்சி 5.5 சதவீதமாக எதிர்பார்க்கப்படுகின்றது. உலகப்பொாருளாதாரம் முடங்கிக் கிடக்கையில் அது சாத்தியமா என்பதும் கேள்விக்குறியே.

இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுக்கான இறக்குமதி செலவினத்தில் 300 கோடி டொலர்களை அரசாங்கம் சேமித்துள்ளது. இதனால் அந்நிய செலாவணி சந்தையில் 300 மில்லியன் டொலர்களை கொள்வனவு செய்யவும் மத்திய வங்கிக்கு முடிந்துள்ளது. ரூபாவின் பெறுமதியும் ஸ்திரமாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இறக்குமதிகளை கட்டுப்படுத்தும் சூத்திரத்தினை தொடர்ந்து கடைப்பிக்க முடியாது. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரித்தால் அதற்கு முதலாவதாக முதலீடுகள் அவசியம், அடுத்தாக சந்தைவாய்ப்பு விஸ்தரிக்கப்பட வேண்டும். சமகாலச்சூழல் அதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கப்போவதில்லை.

ஆக, மொத்தத்தில் மஹிந்தவின் 2021வரவு செலவுத்திட்டம், கற்பனைக்கு அப்பாற்பட்டே இருக்கின்றது. அதில் உள்ள முன்மொழிவுகள் அனைத்துமே கவர்ச்சிகரமானவை.

அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக பெருந்தொகை நிதி தேவை. ஆதற்காக எந்த திட்டங்களையும் கூறாது வெறுமனே வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பித்துள்ளமை அரசியல் அனுபவம் மிக்க மஹிந்தவின் இயலாமையை புடம்போட்டு காட்டுகின்றது.

நிதியைப் பெறுவதற்கு வெளிநாட்டு கடன்கள், நன்கொடைகள் என்பனவற்றுக்கு அப்பால் தற்போதைக்கு சிறிலங்காவின் பெருநம்பிக்கைக்குரிய 'குபேரனாக' இருப்பது சீனா தான்.

அரசாங்கத்தினை ஸ்தரப்படுத்த சிறிலங்கா சீனா பக்கம் வெகுவாக சாய்கின்றபோது, இயல்பாகவே பூகோள, பிராந்திய மூலோபாய குழப்ப நிலை சிறிலங்காவில் மேலும் அதிகரிக்கும். அது ராஜபக்ஷ குடும்பத்திற்கு தொடர் தலைவலியாகவே நீடிக்கப் போகின்றது.

# வீரத்தின் அடையாளம் கார்த்திகைத் திங்கள்

**சிலம்பு**



தமிழ் மண்ணில் குளிர்மையான திங்கள்கள் ஐப்பசியும், கார்த்திகையும்.. அதிலும் கார்த்திகைக்கு என்று தனிச் சிறப்பும் பெருமையும் உண்டு. ஆம் மாவீரர்களை நினைவு கூரும் திங்களும் அம் மாவீரர்களை உலகத்திற்குக் காட்டிய மாவீரன் பிறந்த திங்களும் கொண்டதே இக்கார்த்திகைத் திங்களாகும்.

நவம்பர் 26 என்பது தமிழின வரலாற்றில் என்றுமே எவருமே கண்டிராத ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாவீரன் பிறந்த நாளாகும். அதற்கு அடுத்த நாளான நவம்பர் 27 முதல் மாவீரன் சங்கர் தன் தலைவனின் மடியில் தலை வைத்து வீரச்சாவடைந்த நாளாகும். அதைத் தான் மாவீரர் நினைவு நாளாக அறிவித்தார் தலைவர்.

அதனாற்றான் கார்த்திகைத் திங்களை மற்றைய திங்கள்களிலும் சிறப்பு வாய்ந்ததாக ஈழத் தமிழனம் பெருமையுடன் நினைவு கூருகிறது. மக்கள் மனங்களில் விதைக்கப்பட்ட மாவீரர்கள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டார்கள் என்று தான் கூறுகிறோம்.

மாவீரர்கள் கண்ட கனவுகள் கொண்ட இலட்சியங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் உள்ளங்களில் உயிரோட்டமாக இருக்க வேண்டும். அவர்களது கனவை நனவாக்க வேண்டும். தங்களது காலத்தில் இல்லாவிட்டாலும் அடுத்த சந்ததியாவது விடுதலை பெற்று வாழ வழி காண வேண்டும் என்பது தான் அவர் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டதன் பொருளாகும்.

தியாக தீபம் திலீபன் என்ன கூறினார். மக்கள் புரட்சி வெடிக்கட்டும் மலரட்டும் தமிழீழம் அதை வானுலகில் இருந்து மற்ற மாவீரர்களுடன் பார்த்துக் கொண்டிருப்பேன் என்று. திலீபன் அதனைச் சொல்லிய பொழுது மாவீரர்களின் எண்ணிக்கை அறு நூற்றுக்குச் சற்றுக் கூடுதலாகவே இருந்தது. அதன் பின்னர் போர் வலுப்பெற்று பெரும் போராக வளர்ச்சி அடைந்த நிலையில் ஆயிரக்கணக்கான மாவீரர்கள் தமிழனத்தின் விடுதலைக்கு வித்தாகினார்கள். இந்த எண்ணிக்கை 2009 இல் ஆயுத மௌனிப்பின் பின்னர் எத்தனை ஆயிரம் என்று தெரியாமலே இருக்கிறது. ஆனால் அம்மாவீரர்களின் கனவுக்கு என்ன ஆனது அவர்களின் இலட்சியங்கள் மக்களின் மனங்களில் விதைக்கப்படவில்லையா? என்ற ஐயம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது

இன்றைய அரசியல் நிலைமைகள் அவ்வாறுதான் எண்ணவைக்கின்றன. தேர்தல் அரசியல் தவிர்க்க முடியாததுதான் ஆனால் அதற்காக மாவீரர்களின் இலட்சியங்களை வைத்து அரசியல் செய்யமுடியாது. அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தத்துக்கு அமையவே அரசியல் செய்ய முடியும். ஆயுதப் போராட்டத்திற்கு அது பொருந்தாது. ஆனால் அரசியலில் உள்ளவர்கள் தனித் தமிழீழம் கோருவது ஆறாவது திருத்தத்துக்கு அமைய முடியாது. ஆனால் அரசியலில் உள்ளோர் தாயகம் தேசியம் சுயநிர்ணயம் பற்றிப் பேசுவது அரசியல் யாப்புக்கு முரணானது அல்ல என்பதை உணர்ந்து அரசியலில் ஈடுபடுவதுதான் மாவீரர்களுக்கான இன்றைய அரசியல் என்று உணர வேண்டும்.

அப்படி உணர்ந்தால் தான் அது மாவீரர்களின் கனவுக்கு ஒரு ஆறுதலான செய்தியாக இருக்க முடியும். ஆனால் நாம் என்ன செய்கிறோம் 2005 இல் அவரை ஆதரித்திருக்க வேண்டும்

இப்படிச் செய்திருக்கக் கூடாது அப்படி ஆதரித்திருக்க வேண்டும் என்று இன்று பிரேத பரிசோதனை செய்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு வெட்கக் கேடான நிலையில் நாம் இருக்கிறோம்.

ஆயுதப் போராட்டம் தோற்றம் பெறாத காலம். அப்பொழுது தமிழினப் பெரும்புலவர் காசி ஆனந்தன் ஒரு கனவு கண்டார். அதுதான் தமிழன் கனவு. அக்கனவிலே அவருக்கு ஒரு படை தெரிந்து. அந்தப் படையைப் பற்றிப் பாடினார். அவரது பாடல் தமிழரசுக் கட்சியின் மேடைகளில் ஒலித்தது. அவர் புலிப்படை பற்றிப் பாடினார். ஆனால் அப்பொழுது புலிப் படை இருக்க வில்லை ஆனால் தமிழரசு மேடைகளில் அவரது பாடல் வரிகள் ஒலித்தன.

“அந்தக்காலம் செல்வா காலம். மறவர் படை தான் தமிழ்ப் படை குல மானம் ஒன்று தான் அடிப்படை வெறிகொள் தமிழர் புலிப்படை அவர் வெல்வார் என்பது வெளிப்படை“ என் பதுதான் அவர் கண்ட கனவு. அந்தக் கனவு வீறு நடை போட்டது தான் உண்மை . ஆனால் இரண்டாயிரத்து ஒன்பதில் அதற்கு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அந்த விடியலை நோக்கிய பயணம் ஆயுத மௌனிப்பில் நின்றது. அந்த விடியலை நோக்கிய பயணத்தில் வித்தாகிப் போனவர்கள் தான் மாவீரர்கள். தமிழனின் வீரத்தை எங்கே காணலாம்? என்று கேட்டால் புறநானூற்றிலே காணலாம் என்பார்கள்.

ஈட்டியும் வாழும் கொண்டு பொருதிய காலம் அது. அங்கே நடந்த போர்கள் மன்னர்களுக்கிடையிலே நடந்த போர்களாக இருக்கும். குறுநில மன்னர்களின் மேலான போர்களாயிருக்கும். அதிலே புறமுதுகு காட்டாத சிறுவனின் வீரம் பேசப்பட்டிருக்கும். என் மகன் கோழை அல்ல என் வயிற்றில் பிறந்தவன் அங்கே போர்க்களத்தில் தோன்றுவான் என்ற வீரத்தாயின் உணர்வு இருக்கும். ஆனால் நாம் கண்ணால் காணும் மாவீரர்களின் வீரம் புறநானூற்று வீரத்தையும் விஞ்சிய வீரமாகும்.

மாவீரர்கள் கண்ட கனவுகள் கொண்ட இலட்சியங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் உள்ளங்களில் உயிரோட்டமாக இருக்க வேண்டும். அவர்களது கனவை நனவாக்க வேண்டும். தங்களது காலத்தில் இல்லாவிட்டாலும் அடுத்த சந்ததியாவது விடுதலை பெற்று வாழ வழி காண வேண்டும் என்பது தான் அவர் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டதன் பொருளாகும்.

அங்கே பெண் வீரர்களைப் பற்றித் தனியாகக் குறிப்பிட்டுள்ளார்களா தெரியவில்லை. ஆனால் இங்கே ஆணுக்குப் பெண் சளைத்தவள் இல்லை என்று காட்டிய மாவீரம் நிறைய இருந்தது. அன்று அன்னியர் இந்த மண்ணில் காலடி வைத்தபொழுது வீறு கொண்டு களமாடிய சங்கிலியனையும், இந்த மண் அறியும். பண்டார வன்னியனையும் அறியும். அவர்கள் யாரால் காட்டிக் கொடுக்கப்பட்டார்கள் என்ற வரலாறும் எமது மண்ணில் இருக்கிறது துரோகத்தால் தான் தமிழன் அழிந்தான் என்பது தான் வரலாறு.

மாவீரர்கள் வித்தாகிப்போனதன் அடையாளமாகத்தான் மாவீரர் துயிலும் இல்லங்கள் தோற்றம் பெற்றன. அவர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டு அவ்விடத்திலே நினைவுக்கற்கள் நடப்பட்டு மக்களின் எண்ணங்களிலே விதைக்கப்பட்டது. வீரம் தொடர்வதற்காகவே. அவ்வகையான எழுச்சி ஏற்பட்டு விடும் என்பதால் தான் துயிலும் இல்லங்கள் இடித்து அழிக்கப்பட்டன.

ஆனால் அவை மீண்டும் எழுந்து நின்றன. அழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களின் எழுச்சிதான் பின்னர் மக்களின் எழுச்சியாகத் தொடர்ந்தது. இன்று அவை முற்றாக அழிக்கப்பட்டன. அவற்றின் மேல் படையினர் தமது பாசறைகளைக் கட்டிக் கொண்டார்கள். அதாவது மக்கள் மனங்களில் இருந்து எழுச்சி உணர்வை நீக்கவேண்டும் என்றால் மாவீரர் துயிலும் இல்லங்கள் இல்லாமல் போக வேண்டும். இது மக்களுக்கான ஒரு செய்தி.

மாவீரர்களின் உறவுகள் இதை உணர்ந்து கொண்டாலும் அரசியல் செய்து பிழைப்பு நடத்துவோர் உணர்ந்து கொள்ளவில்லையே. இந்த இல்லங்களின் பெறுமதியை. அவை வெறும் கற்கள் என்று தான்

இன்றைய அரசியல்வாதிகள் நினைத்துக் கொண்டு தமது அரசியல் பாதையைத் தெரிவு செய்து கொண்டுள்ளார்கள்.

தமிழர் தாயகத்தின் முதலமைச்சராக தருகிறோம் என்றபொழுது பதவி வேண்டாம் இனத்தின் உரிமைகள் தான் முதன்மையானது என்று கூறிய தலைவன் எங்கே? இன்று சின்னச் சின்னப் பதவிகளுக்காக உரிமைகளைப் பற்றி அக்கறை கொள்ளாத அரசியல் வாதிகள் எங்கே?

அவர்கள் எல்லாம் வருவார்கள் விளக்கேற்றுவார்கள். அஞ்சலி செய்வார்கள். மாவீரர்கள் தங்களின் சொத்து என்பார்கள். அவர்களை மறக்க முடியாது அவர்கள் வழியில் செல்வோம் என்பார்கள் ஆனால் அவருக்கு வாக்களியுங்கள் இவருக்கு வாக்களியுங்கள் என்பார்கள். மீண்டும் வேதாளம் முருக்கு மரத்தில் ஏறிய நிலைக்குத்தான் தமிழினம் தள்ளப்படும்.

இனிமேலாவது விழித்துக்கொள் தமிழினமே. மாவீரர்களின் கல்லறைகள் இல்லாவிட்டாலும் அவர்கள் கட்டிய இலட்சியத் தூண்களை நினைவில் நிறுத்தி இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு சரியான பாதை வழியாக பயணத்தைத் தொடரவேண்டும். இது தான் மாவீரர்களுக்குத் தமிழினம் செலுத்தும் கார்த்திகைத் திங்கள் காணிக்கையாகும்.

# புரிந்து கொள்வாரா ட்ரம்ப்?

பூலோகன்

உலகத்திற்கே எதிர்பார்ப்பினை ஏற்படுத்திய அமெரிக்க தேர்தல் நடைபெற்று நிறைவடைந்தாகிவிட்டது. மூன்று வாரங்கள் நிறைவடைந்துமாகிவிட்டது. ஆனால் இன்னமும் உத்தியோக பூர்வமான முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. அமெரிக்க வரலாற்றில் இந்த தேர்தலில் தான் உத்தியோக பூர்வமான இறுதி முடிவு அறிவிப்பதற்கு இத்தனை நாட்கள் இழுபறி ஏற்பட்டிருக்கின்றது.

இந்த இழுபறிக்கெல்லாம் முழுமையான காரண கர்த்தாவாக திகழ்பவர் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். இவர் குடியரசுக்கட்சியின் சார்பில் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதிக்கான போட்டிக்களத்தில் குதித்திருந்தார். செல்வந்தரான ட்ரம்பிற்கு அதிகாரம் தேவைப்பட்டது. இரண்டாவது தடவையும் அமெரிக்காவின் அரியனையில் ஏறுவதற்கே அதிகம் விரும்பினார்.

துரதிஷ்டவசமாக தேர்தல் முடிவுகள் அவருடைய கனவை தகர்த்திருக்கின்றன. ட்ரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் 306 தேர்தல் மன்றங்களை வென்று முன்னிலை பெற்றுள்ளார். ஆனால் டொனால்ட் ட்ரம்பால் வெறுமனே 232 தேர்தல் மன்றங்களையே வெல்ல முடிந்துள்ளது.

2016 தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் 306 தேர்தல் மன்றங்களை வென்றிருந்தபோது, அப்போதைய ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் 232 வென்று இருந்தார். வரலாறு தற்போது திரும்பியிருக்கின்றது அவ்வளவு தான். இதுபற்றிய புரிதல் ட்ரம்ப்பு எப்போது ஏற்படுமோ தெரியாது.

தேர்தல் முடிவுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாது விட்டாலும், உலகின் பிரபல ஊடகங்களும், நிபுணர்களும் ஜோ பைடன் வெற்றி பெற்றுவிட்டதாக கூறிவிட்டார்கள். ஜோ பைடனும் அடுத்த ஜனாதிபதி தானே என்ற அடிப்படையில் நிருவாக கட்டமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளையும் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸூன் இணைந்து ஆரம்பித்துவிட்டார்.

இவற்றையெல்லாம் எள்ளளவும் கண்டுகொள்ளாத ட்ரம்ப் 'தேர்தல் மோசடி' இடம்பெற்றுள்ளது என்பதில் உறுதியாக நிற்கின்றார். நீதிமன்றத்தினையும் நாடியுள்ளார். வெள்ளை மாளிகையை விட்டு தற்போதைக்கு வெளியேறப் போவதில்லை என்றும் கூறுகின்றார். தனே தேர்தலில் வெற்றி பெற்றுள்ளேன் என்றும் பிறிதொரு தருணத்தில் கூறுகின்றார்.

இத்தகைய பின்னணியில் தற்போது நீதிமன்றத் தீர்ப்பினையே நம்பியிருக்கின்றார் ட்ரம்ப். ட்ரம்பின் பிரசாரப்பிரிவு தேர்தல் தினத்திலிருந்து சட்ட ரீதியில் பெருவாரியான வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறது. இந்த வழக்குகளின் நோக்கம் உண்மையில் தேர்தல் முடிவுகளை மறுதலையாக்குவதாகத் தோன்றவில்லை.

ஏனென்றால் வாக்கு எண்ணும் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாகவோ அல்லது குழப்பகரமான நிலைமைகள் எந்தவொரு வாக்கு எண்ணும் நிலையங்களில் இடம்பெற்றிருப்பதாகவோ தகவல்கள் இல்லை. ஆகவே வாக்குகளை எண்ணும் செயன்முறைகளை மீண்டும் ஏற்படுத்தி அதனை நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து இழுத்தடித்துச் செல்வதே ட்ரம்ப் தரப்பின் நோக்கமாக உள்ளது.

இதன் மூலம் நிச்சயமற்ற தன்மையொன்றை உருவாக்க முயற்சிப்பதே பின்னணியாக இருக்கின்றது. ஜனவரி 20ஆம் திகதி வரையில் தானே ஜனாதிபதி என்பது ட்ரம்புக்குத் தெரியும். தற்போதிலிருந்தான எஞ்சிய காலத்தில் தனக்குள்ள அனைத்துப்பலங்களையும் பயன்படுத்தி சொற்பகாலமாவது ஆட்சியை தன்வசம் வைத்திருக்கவே விரும்புகின்றார் ட்ரம்ப்.

ஆனால் அதுகூட ட்ரம்புக்கு இயலாத காரியமாகப்போகின்றது என்பதே நிதர்சனமான உண்மையாகின்றது. ஏனென்றால் எதிர்வரும் டிசம்பர் 14ஆம் திகதி தேர்தல் மன்றம் கூடுகின்றது. தேர்தல் மன்றத்தில் வாக்களிப்பவர்கள் தெரிவாகிவிட்டனர். அவர்கள் தங்கள் தீர்க்கமான முடிவுகளை அறிவிக்க உள்ளார்கள்.

அதிலும் பைடனே வெற்றி பெறுவார் என்றே கணிக்கப்பட்டுள்ளது. காரணம், பைடன் வரையறுக்கப்பட்ட தேர்தல் மன்றங்களில் மட்டும் வெற்றி பெற்றிருக்கவில்லை. மிச்சிகன், நெவாடா, விஸ்கோன்சின், பென்சில்வேனியா மற்றும் அரிசோனா ஆகிய மாநிலங்களில் ட்ரம்பினால் வெற்றி பெறமுடியாத அளவிற்கு பைடன் முன்னணியில் இருக்கிறார். ஆகவே அந்த வெற்றிகளை மாற்றியமைப்பது என்பது ட்ரம்பிற்கு இனி இயலாத காரியமே.

இதனைவிடவும் தேர்தல் மன்றங்களில் வாக்களிக்க உள்ளவர்களும் தமது பிராந்திய மக்களின் விருப்புக்கு மாறாக ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள். அவ்வாறு மறுதலித்து வாக்களிப்பதானது நேரடியாகவே மக்களின் 'ஜனநாயக உரிமையை' நிராகரிப்பதற்கு நிகராகும். எனவே தேர்தல் மன்றத்தில் வாக்களிக்க தகுதி பெற்றிருப்பவர்கள் மக்களின் முடிவினை மாற்றமாட்டார்கள். ஆகவே ட்ரம்பிற்கு தேர்தல் மன்றத்திலும் சாதகமான நிலைமைகள் இல்லை.

ஆக, ட்ரம்ப சுமூகமான அரச நிருவாகத்தினை கையளித்து விட்டுச் வெள்ளை மாளிகையை விட்டு அமைதியாக வெளியேறுவதை தவிர வேறு வழியேதும் இல்லை. ஆனால் தனது தோல்வியை இதுவரையில் ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துக்கொண்டிருக்கும் ட்ரம்ப் அவ்விதம் செய்வாரா என்றால் நிச்சயமாக இல்லை.

ஏனென்றால் அவருடைய துணைவியார், உறவினர்கள், வெள்ளை மாளிகை அதிகாரிகள் என்று அனைவரும் ட்ரம்பிற்கு அறிவுரை கூறிய போதும் அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் அவருடைய துணைவியார் விவாகரத்து வாங்கப்போவதாக கூட செய்திகள் வெளியாகின. ஆனாலும் மனைவி போனாலும் பரவாயில்லை என்ற மனோநிலையில் அதிகாரத்தின் மீது தான் தனது முழுப்பற்றும் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தி விட்டார் ட்ரம்ப்

அதுமட்டுமன்றி தான் வெளியேற நேரிட்டாலோ அல்லது பலவந்தமாக வெளியேற்றப்பட்டாலோ அடுத்து அரியாசனத்தில் அமருபவர் இலகுவாக நாட்டினதும், உலகத்தினதும் நிருவாகத்தினை செய்யமுடியாத அளவிற்கு நிலைமைகளை இடியப்பச் சிக்கலாக்கும் செற்றிட்டத்தினையும் முன்னெடுத்துள்ளார். ஒருங்கே தனது பதவியைத் தக்கவைப்பதற்கு தன்னிடம் இருக்கும் அதிகாரத்தினை அதியுச்ச அளவிலும் பயன்படுத்த ஆரம்பித்து விட்டார்.

ஏற்கனவே, தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் தனக்கு சார்பாக உயர்நீதிமன்ற நீதிபதியாக ஏமி கோனி பாரெட்டை நியமித்தார். தேர்தல் நிறைவடைந்த கையோடு பாதுகாப்பு செயலாளர் மார்க் எஸ்பரை பதவி நீக்கம் செய்தார். தேர்தலில் முறைகேடுகள் என்ற கருத்தினை ஏற்க மறுத்த சைபர் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு பாதுகாப்பு முகவர் அமைப்பின் தலைவர் கிறிஸ் கிரெப்சேவையும் பதவி நீக்கியுள்ளார் ட்ரம்ப்.

இவ்வாறு வெள்ளைமாளிகை நிருவாகக்கட்டமைப்பினுள் திடீர் திடீரென பதவிநிலையில் உள்ளவர்களை வெளியேற்றி மாற்றங்களை செய்து வருகின்றார் ட்ரம்ப். இந்த செயற்பாடு வெள்ளை மாளிகையின் நிருவாகத்தினை குழப்பியுள்ளது.

மறுபக்கத்தில், சீனாவின் வர்த்தக நிறுவனங்களுக்கு மேலும் தடைகளை விதிக்கும் அறிவிப்பில் கைச்சாத்திட்டுள்ளார். ஈரானின் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கான ஆலோசனைகளை நடத்தி செயற்படுத்துவதற்கும் எத்தனிப்புக்களைச் செய்கின்றார்.

அரேபிய பிராந்தியத்தில் நிலவிய சமநிலையை மிகவும் பாரதூரமான முறையில் ட்ரம்ப் குழப்பயுள்ளார்.. ஈரானைத் தனிமைப்படுத்த வேண்டும் என்பதற்காக, இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு இராச்சியம் முதலான இஸ்லாமிய நாடுகளுக்கும் இடையில் உறவுகளை ஏற்படுத்த முனைந்த ட்ரம்ப் அதில் வெற்றியும் கண்டுவிட்டதால் அங்கு எரிமலை எப்போது வெடிக்கும் என்ற நிலைதான் காணப்படுகின்றது.

சீனாவையும், ரஷ்யாவையும், வடகொரியாவையும் ஏக நேரத்தில் எதிர்த்து அந்த நாடுகளின் தலைவர்களின் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் காரணமாகிவிட்டார் ட்ரம்ப். மேலும், ஆப்கான், ஈரானிலிருந்து அமெரிக்க படைகளை தனது காலத்திற்குள்ளேயே மீளப்பெறவும் உத்தரவிட்டிருக்கின்றார்.

இதனைவிட அண்மைய காலங்களில் கொரோனா வைரஸ் தொற்றை வெறுமனே 'சீன வைரஸ்' என்ற கோணத்தில் அணுகி அதனை ஒழிக்கும் செயற்றிட்ட பொறுப்பினை எந்தவொரு சுகாதார அடிப்படை அறிவுகூட அற்ற தனது மருமகனிடம் ஒப்படைத்து அமெரிக்காவையே சீரழித்தும் விட்டார்.

தனது ஒரு தடவை ஆட்சிக் காலத்திலேயே இத்தகையை வீரதீரச் செயல்களுக்கு காரணமாகியிருக்கும் ட்ரம்ப் தற்போது ஜனநாயக மறுதலிப்பினை பகிரங்கமாக செய்வதால் ஜனநாயகம் பற்றி உலகுக்கே உபதேசம் செய்யும் அமெரிக்காவுக்கு தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டார். அமெரிக்க வல்லாதிக்க வரலாற்றில் அது 'பெரும் கறையாகவும்' மாறியிருக்கின்றது.

எவ்வாறாயினும், 47 சதவீதமான அமெரிக்கர்கள் ட்ரம்ப்பை ஆதரிக்கின்றார்கள். அவர்களின் அன்பையும், ஆதரவையும், மதிப்பையும் பறிகொடுக்காது இருப்பதற்காகவாவது ட்ரம்ப் வெள்ளை மாளிகையிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்படாதிருக்க வேண்டும். இதனையாவது அவர் புரிதலுடன் உணர்ந்துகொள்வாரா இல்லை வெள்ளை மாளிகையிலிருந்து மிகமோசமாக வெளியேற்றப்பட்டவர் என்ற பதிவுடன் செல்லப்போகின்றாரா? முடிவு அவர் கையிலே.



நன்றி - Google

# பைடன்–கமலா கூட்டை தமிழ்த் தேசிய தரப்புக்கள் கையாளுதல் சாத்தியமா?



**தந்திரீகன்**

அமெரிக்க தேர்தலில் சர்ச்சைகள் நீடித்துக்கொண்டிருந்தாலும், 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவாகிவிட்டார். 49 ஆவது துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸும் தெரிவாகிவிட்டார். இப்போது ஆட்சியை பொறுப்பெடுபதற்கான தயார்ப்படுத்தல்களில் பைடன்- கமலா கூட்டணி இறங்கியுள்ளது.

இந்த நிலையில் உலகவாழ் தமிழர்கள் அனைவருமே உற்சாகமாக இருக்கின்றார்கள். தம்மினத்தில் ஒருவர் அமெரிக்க துணை ஜனாதிபதி என்பது அவர்களின் பெருமிதத்திற்கு காரணமாகின்றது. இதில் ஒருபடி மேலே சென்றிருக்கின்றது தமிழர் தாயகத்தில் வாழும் தாயக உறவுகள்.

ஏனென்றால், முள்ளிவாய்க்கால் அவலத்திற்கு பின்னர் கடந்த காலத்தில் அமெரிக்கா தம்மீது கொண்டிருந்த ‘கரிசனை’ தான் அதற்கு காரணமாகின்றது. அதுமட்டுமன்றி தாயகத்தில் இருக்கின்ற தமிழ்த் தேசிய தரப்புக்களும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, இனப்படுகொலைக்கான நீதி, சிறிலங்கா அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்களில் அமெரிக்காவை மையப்படுத்தி அதன் மீதான ‘அதீத’ நம்பிக்கையையும், எதிர்பார்ப்பினையும் எற்படுத்தியிருந்தனர்.

கடந்த ஒரு தசாப்தகாலமாக இவ்வாறு தான் நிலைமை இருந்து வருகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் தாயகத்தமிழர்களின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தினார்கள். நாம் சர்வதேசத்தின் ஊடாக தீர்வினைப் பெற்றுத் தருவோம் என்று தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள தரப்புக்கள் அடிக்கடி தாயக மக்களின் உணர்திறனுக்கு கொண்டு வந்து கொண்டே இருந்தனர்.

அதிலும், அமெரிக்கா, 2012இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் போரின் இறுதியில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் தானாக முன்வந்து தீர்மானமொன்றை கொண்டுவந்ததோடு சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒரு சர்வதேச ‘பொறியை’ ஏற்படுத்தியிருந்தது.

அதன் பின்னரான காலப்பகுதியில் தொடர்தேச்சியாக, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஏனைய சர்வதேச மன்றங்களில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தலைவலியைக் கொடுக்கும் வண்ணம் செயற்பட்டு வந்தது. ஆனால் 2015ஆம் ஆண்டு சிறிலங்காவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் இந்த நிலைமைகள் தலைகீழாக மாறியன.

அமெரிக்கா மீது அதீத நம்பிக்கை வைத்திருந்த தமிழ்த் தேசிய தரப்புக்களை வைத்தே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் சரி, ஏனைய உலக மன்றங்களிலும் சரி, தமக்கு சாதகமாக சிறிலங்காவில் ஆட்சியில் இருந்தவர்களுக்கு காணப்பட்ட ‘தலைவலியை’ நீக்கியது. ஒரு கட்டத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தலைவலிகள் அனைத்தும் நீக்கம் பெற்றதை தாண்டி சர்வதேசத்திற்கே அஞ்சத்தேவையில்லை என்ற மனோபலத்தினையும் அதே அமெரிக்க ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்த நிலைமையானது 2019இல் மீண்டும் சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அதிலிருந்து வெளியேறப்போவதாகவும் அறிவிக்குமளவிற்கு நிலைமைகளை உருவாக்கியிருந்தது.

இந்த சமயத்தில் சிறிலங்காவின் அறிவிப்புக்களுக்கு பதிலுரைக்க முடியாத நிலையில் அமெரிக்காவே இருந்தது. ஏனென்றால் அமெரிக்காவே ஐ.நா மன்றத்தின் மீது பலத்த குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தது. அத்தகைய அமெரிக்காவால் எவ்வாறு சிறிலங்கா அரசாங்கத்தின் அறிவிப்புக்களுக்கு மட்டுப்பாடுகளையோ, கட்டுப்பாடுகளையோ போட முடியும். ஆகக்குறைந்தது ‘ஏன் இப்படி செயற்படுகின்றீர்கள’ என்று கூட கேள்வி எழுப்ப முடியாத கையறு நிலையில் தான் இருந்தது அமெரிக்கா.

ஆனால், புதிய ஆட்சியாளர்களின் சீன சார்ப்பு போக்கும், அமெரிக்காவில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றமும் மீண்டும் எமது விடயங்களில் அமெரிக்க அதிகூடிய அக்கறை காட்டும் என்ற நம்பிக்கையையும், எதிர்பார்ப்புக்களையும் தாயக மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த அபரிதமான நம்பிக்கைக்கு கடந்த காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் வழங்கிய வாக்குறுதிகள் காரணமானதனைப் போன்ற நிலைமைகள் இருக்கவில்லை. மாறாக மூன்று பெண்களே காரணமாக இருக்கின்றார்கள்.

முதலாவது பெண்மணி துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கமலா ஹரிஸ். இவர் தமிழ் நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர். அத்துடன் அவர் தனது தயாரின் தோள்களிலிருந்தபோதே வெகுஜன போராட்டங்களில் கலந்து கொண்டு மக்களின் நீதிக்கான கோரிக்கையை பெரிதும் கருத்தில் கொள்பவராக விளங்கி இருகின்றார்.

அதுமட்டுமன்றி அவர், அமெரிக்காவில் கறுப்பின பிரஜைகளுக்கு அநீதி இழைக்கப்பட்ட தருணங்களில் எல்லாம் களத்தில் இறங்கி போராடியவர். சட்ட ரீதியாக நீதி பெறுவதற்காக நீதிமன்றங்களில் வழக்குகளை தாக்கல் செய்து போராடியவர். பெண்ணுரிமைகள் மறுப்பு, பால்நிலை சமத்துவம், சமத்துவ உரிமைகள், அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுதல் போன்ற விடயங்களை வலிந்து தலைநுழைத்துச் செயற்பட்டு வரும் ஒருவராக இருக்கின்றார். இந்தப் பின்னணியில் அவர் மீது தாயகத் தமிழர்கள் எதிர்பார்ப்புக்களை கொள்வது இயல்பானது.

இரண்டாவதாக ரோகினி லக்ஷ்மி ரவீந்திரன் கொசோக்லு என்ற இளம் பெண் கமலா ஹரிஸின் அலுவலக தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர். இத்தகைய ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதனால், தமிழர்கள் அவர் மூலமாக கமலா ஹரிஸுடனான ஊடாட்டத்தினை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பதும் தாயக தமிழர்களின் கணக்காக இருக்கின்றது.

மூன்றாவதாக, சூசன் ரைஸ். இவர் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் பதவியில் அமர்த்தப்படுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. சூசன் ரைஸை தாயகத் தமிழர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஏனென்றால் இவர் வெள்ளை மாளிகையில் ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் இருந்தபோது, சிறிலங்கா விவகாரங்களை கையாண்ட ஒருவர்.

குறிப்பாக, சிறிலங்காவில் போர் நிறைவு பெற்றதன் பின்னரான காலத்தில் ஜெனீவாவில் பிரேரணை கொண்டு வருவதற்கும், போர்க்குற்றவிசாரணைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களையும் திரட்டி சமர்ப்பிப்பதில் பெரும்பங்காற்றியவர்.

அதுமட்டுமன்றி அவர் பதவியிலிருந்து அகன்ற பின்னரும் கூட, சிறிலங்கா விடயங்கள் தொடர்பில் தனது நிலைப்பாட்டை மாற்றாது தொடர்ச்சியாக குரலெழுப்பி வருபவராக இருக்கின்றார். ஆகவே அவருடைய நியமனமும் தமக்கு நிச்சயம் சாதமான சமிக்ஞை தான் என்பதே தாயக தமிழர்களின் நிலைப்பாடு.

70 வருடங்களுக்கு மேலாக விடுதலைக்காக போராடும் இனமொன்றுக்கு இத்தகைய உணர்வு ரீதியான அங்கலாய்ப்பு ஏற்படுவதில் தவறில்லை. ஆனால், அந்த இனத்தின் பிரதிநிதிகள், இத்தகைய சாதகமான சூழலை எவ்வாறு கையாளப்போகின்றார்கள் என்பதில் தான் அனைத்துமே தங்கியிருக்கின்றது.

தமிழ்த் தேசியப் பரப்பில் தற்போது ஏற்பட்டள்ள பிளவுகளும், பிரள்வுகளும் அதேபோன்று சிறிலங்காவையை மையப்படுத்தி நடைபெறும் அமெரிக்க, சீன, இந்திய போட்டிகளை கையாள்வதற்கான திராணியற்ற தன்மையும் எத்தகைய சாதகமான நிலைமைகள் இருந்தாலும் அது வெற்றிகளை ஏற்படுத்தி தரப்போவதில்லை.

தமிழ்த் தேசியப் பரப்பில் தற்போது ஏற்பட்டுள்ள இராஜதந்திர மூலாபாய சக்திகளின் வெற்றிடம் முதலில் நிரப்பபடவேண்டும். தமிழ்த் தேசிய சித்தாந்தம் தாயக மக்களுக்கானது என்ற கொள்கையில் பறுருறுதி எழ வேண்டும். இவற்றை மையப்படுத்திய கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். அது மக்களின் அடிநாதத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும்.

அவ்விதமான நிலைமைகள் தாமதமன்றி தாயகத்திலும், அதற்கு சமகாலத்தில் புலத்திலும் ஏற்பட வேண்டும். அதுவே, அமெரிக்காவில் தற்போது ஏற்பட்டுள்ள சாதக நிலையை ‘அமெரிக்க நலனுக்கு’ அப்பால் தாயக தமிழர்களின் விடிவுக்காக பயன்படுத்த முடியும். இல்லையேல் மீண்டும் பழைய குருடி கதவை திறடி கதையாக பைடன் - கமலா ஆட்சியின் ஈற்றில் எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கைகளும் மட்டுமே மீதமாக இருந்து கொண்டிருக்கும்.



# போர் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்ற சீன புலனாய்வு

## புதிய உலக மாற்றத்தை சந்திக்க தயாராகும் உலகம்

அழ. இனியவன்

(கடந்தமாதம் தொடர்ச்சி)

சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர். இந்த இரகசியம் வெளியில் கசிய விடாது அப்படியே அடக்கி வாசித்தது அமெரிக்கா.

உண்மையில் அந்த இருவரில் ஒருவர் காப்பாற்றப்பட்டுள்ளார் என பத்திரிகை ஆய்வாளர்கள் ஊகம் கொள்கின்றனர். ஆனால் தங்கள் தரப்பில் ஒருவர் காயமடைந்தார் என அமெரிக்க கடற்படையினர் தகவல் வெளியிட்டிருந்தனர். உண்மையில் அவர்களது தரப்பில் ஒரு நகக்கீறல் கூட ஏற்படவில்லை என்பதே உண்மை. இதன் காரணம் தாக்குதல் நடத்தியவரில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அமெரிக்கப்படையினரால் காப்பாற்றப்பட்டார். என வெளிப்படுத்தி னால் சந்தேக நபரை சட்டத்தின் முன்னால் நிறுத்தவேண்டும், நீதி விசாரணைகள் மூலமே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இது நாட்டின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடையம். அதனாலேயே அமெரிக்க சீருடையில் துறைமுகத்தின் உள் நுழைந்த உளவாளியை தமது படையினர் என அமெரிக்க படையினர் ஒரு கதையை கட்டவிழ்த்திருந்தனர்.

இதன் நோக்கம் சீனாவிற்கு அமெரிக்காவுடனான யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் முதலில் அமெரிக்க கப்பல்களை அழித்து அவர்களது கடல் பலத்தை இல்லாமல் செய்வதற்காக சீனா மேற்கொண்ட வேவு நடவடிக்கையாகவே அமெரிக்கா பார்க்கின்றது. அதே நேரத்தில் சீனா தனது வேவுத்திட்டம் தோல்வியில் முடியுமாயின் வேவுதாரிகள் தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என தனது உளவாளிகளுக்கு குறிப்பிட்டு அவ்வாறு இறப்பவர்கள் நாட்டிற்காக உயிரை விடும் உன்னதமான தியாகிகளாக சீனப்படையினரால் கௌரவிக்கப் படுகின்றனர்.

இதோடு கடந்த 05 டிசம்பர் 2008 அன்று ஜப்பானின் கீரோ சீமாவிற்கு அருகில் ஏழு கடற்படையினர் பயணித்த இரண்டு விமானங்கள் மோதி கடலுக்குள் விழுந்து பின்னர், காணாமல் போன சம்பவத்தில் 5 கடற்படையினர் காணாமல் போயிருந்தனர். ஏனைய இருவரில் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார். மற்றவர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என அமெரிக்க பாதுகாப்பு படையினர் தகவலை வெளியிடவில்லை.

கேசி-130 மற்றும் ஃஎப்ஃஎ 18 ரக விமானங்கள் விபத்திற்குள்ளாயின என்று ஹிரோஷிமாவுக்கு அருகிலுள்ள இவாகுனி கடற்படை அதிகாரிகள் கூறியிருந்தாலும் இந்த சம்பவத்தை 'விபத்து' என்று கடற்படை பிரிவுகள் இன்னும் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. சி-130 விமானத்தில் 5 பேரும், ஃஎப்ஃஎ-18 விமானத்தில் 2 பேரும் இருந்தனர். போர் விமானத்தில் இருந்து ஒருவர் மீட்கப்பட்டுள்ளார். இதனை அமெரிக்கா- ஜப்பானின் கோணத்தில் இருந்து பார்க்காது சீனாவே திட்டமிட்டு ஜப்பானுடன் பகையை ஏற்படுத்த இவ்வாறான செயலை செய்தது என நோக்குவதுபோல் தெரிகின்றது.

ஏனெனில் அதன்பின்னராக வர்த்தக ரீதியில் அமெரிக்க அரசு நிரவாகம் சீனாவை நேரடியாக தாக்கி வருகின்றமையை உணர முடிகின்றது. மேலும் கடந்த 23ஒகஸ்ட் 2020அன்று அமெரிக்காவின் காம் கிரிஷ்ரி துறைமுகத்தில் மாபெரும் கப்பல் ஒன்று வெடித்துச்சிதறியது. இதில் ஆழ்கடல் ஆராய்ச்சியில் ஈடுபடும் அதிகாரிகள் இருவர் உயிரிழந்துள்ளனர். இது திட்டமிட் சதியாக இருக்கக்கூடும் என துறைமுக நிர்வாகம் ஆய்வு செய்வதுடன் சீனாவின் பங்கு இதில் நிச்சயம் உள்ளது என அரசியல் நோக்கரகள் கருதுகின்றனர்.

எனவே மேற்கூறப்பட்ட பல்வேறு நிகழ்வுகளும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் நடந்திருந்தாலும் அவையனைத்தும் ஒரே நிகழ்ச்சியின் சங்கிலிக்கோரவைகளாகவே பார்க்கப்பட வேண்டும். அது அனைத்திற்கும் காரணம் ஒன்றுதான். உலகின் தலைமையை கைப்பற்ற நினைக்கும் சீனா - அமெரிக்கா தலைமையிலான மேற்குலகுடன் ஒரு யுத்தத்தை எதிர் பார்த்துகாத்திருக்கின்றது.

அதற்குமுன்னதாக ஒருபுறம் அமெரிக்கவுடன் இணைந்துள்ள நாடுகளின் கூட்டை சதிகள் மூலம் உடைத்துவிடுதல். மற்றொருபுறம் அமெரிக்காவின் முதுகெலும்பாக இருக்கின்ற கடற்படையின் பலத்தை உடைத்து சீனா தனது "ஒரே சீனா"எனும் கொள்கையை நிறுவி சர்வதேசக்கடலை தன் பக்கம் வைத்துக்கொள்ளல் என்பதுவே அதுவாகும்.

இது இவ்வாறு இருக்க கடந்த செப்டெம்பர் 19/2020 சனிக்கிழமை தங்கள் நாட்டின் பாதுகாப்பு எல்லைக்குள் சீனா தனது 19 போர் விமானங் களை அத்துமீறி நுழைத்துள்ளது என தைவான் பாதுகாப்பு அமைச்சகம் குற்றம் சுமத்தியுள்ளது. இந்த சம்பவம் ஒரே மாதத்தில் இடம்பெற்ற 2ஆவது சம்பவம் என் தைவான் கூறுகின்றது. இதற்கு பதிலளித்த சீனா வின் உத்தியோக பூர்வ செய்தித்தளமான குளோபல் ரைம்ஷ்இ தைவானை ஆக்கிரமிப்பதற்கான ஒத்திகைதான் இந்த நடவடிக்கை என குறிப்பிட்டிருந்தது.

சமீபத்தில் அமெரிக்க சுகாதாரத்துறை அமைச்சர் அலெக்ஷ் அசார் அவர்கள் தைவானுக்கு விஜயம் செய்திருந்தார். இது சீனாவிற்கு கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. குறித்த வான்வெளி அத்துமீறல் அலெக்ஷ் அசார் அவர்கள் தைவானில் தங்கியிருந்த போதே இடம்பெற்றிருந்ததாக நம்பப்படுகின்றது.

கடந்த நாற்பது ஆண்டுகளில் முதல் முதலாக தைவானுக்கு விஜயம் செய்த அமெரிக்க அதிகாரி திரு அலெக்ஷ் அசார்தான். இது ஏறகனவே கொதி நிலையில் இருந்த சீனாஇஅமெரிக்க உறவுகளை இன்னும் மோசமடைய செய்துள்ளது. எது எவ்வாறு இருப்பினும் உலகில் வாழும் மக்கள் விரும்பியோஇவிரும்பாமலோ ஒரு புதிய உலக மாற்றத்தை இந்த உலகம் சந்திக்கவிருக்கின்றது. இதன் பக்கவிளைவுகள் யாவும் வறிய நாடுகள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவிருக்கின்றது.

## பொம்பியோவின் விஜயமும்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யுத்தத்தில் ராஜபக்ஷக்களுக்கு உறுதுணையாக நின்று இனப்படுகொலையின் வாயிலாக ராஜபக்சக்களைப் பலப்படுத்தி அதன் மூலம் இலங்கையை சீனச் சார்பு நிலைப்பாட்டிற்கு சீனாவால் இட்டுச்செல்ல முடிந்தது.

இதன் மூலம் ராஜபக்சக்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் வலுவான காலூன்றலுக்கும் வழியமைத்து விட்டவர்கள். இன்றைய சூழமைவில் ஈழத் தமிழர்கள் இந்தியாவின் முகப்பில் வளமான கேந்திரத்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடத்தில் வாழ்வதனால் அவர்களும் ஒரு முக்கிய புவிசார் அரசியல் சக்தியாக உள்ளனர். இதுதான் ஈழத் தமிழர்களுக்கு இருக்கக்கூடிய இறுதிப் பலமாகும்.

மொத்தத்தில் கடந்த காலப் படிப்பினைகளுக்கூடாக முள்ளிவாய்க்கால் யுத்த காலத்தில் வளர்ச்சியடைந்த சீன - சிங்கள - ராஜபக்சக்கள் உறவு தற்போது தமிழின அழிப்பை நோக்கி பெரு விருட்சமாக மேலும் வளர்ந்து இருக்கும் நிலையில் தமிழ் மக்கள் தம்மைக் தற்காப்பதற்கான குறைந்தபட்ச இடைவெளியை சரிவரப் புரிந்து கையிலெடுக்க வேண்டும்.

இந்நிலையில் சீன - சிங்கள உறவு ஒருபக்கமும் இந்திய - அமெரிக்க உறவு இன்னொரு பக்கமும் இருக்கும் இரு முனைகள் கொண்ட முரண்பாட்டின் மத்தியில் தற்போது தமிழ் மக்களுக்கு சாதமாக காணப்படும் வாய்ப்புகளை சரிவர பயன்படுத்த தமிழ் தலைவர்கள் தயாராக வேண்டும்.

தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உண்டு என்பதை இக்கட்டத்தில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சரிடம் ஈழத் தமிழ்த் தலைவர்கள் தெரிவிக்க வேண்டும். ஈழத் தமிழர் விவகாரம் இத்தகைய சந்திப்புகளின் போது முக்கியமான விவகாரங்களில் ஒன்றாக எடுத்து பேசப்பட வேண்டும் என்பதை இந்திய-அமெரிக்க தரப்புக்கு ஈழத் தமிழர்கள் தெரிவிக்க வேண்டும்.

இந்த வகையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு . மைக் பொம்பியோவின் விஜயத்தை ஈழத் தமிழர்கள் தமக்கு அப்பாலான ஏதோ ஒரு பிறத்தி விவகாரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

# புதிய அரசியல்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தாயகம் சிங்களதேசமாக மாறியிருக்கும் என்பது அவர்களுக்கு எப்போது புரியுமோ என்பது அரசியல் ஆய்வாளர்களது கருத்தாக அமைந்து விடுகின்றது.

இப்போது தாயகத்தில் தமிழ் மக்கள் எந்தவிதமான வணக்க நிகழ்வுகளையோ, போராட்டங்களையோ தன்னிச்சையாக நடாத்த முடிவதில்லை.

அவ்வாறு ஒருசிலர் தாங்கள் தன்னிச்சையாக முன் எழுந்து வரும்போது அவர்களுக்கு முன்னரே அவர்களது வீடுகளுக்கு அரச புலனாய்வாளர்கள் சென்று விடுகின்றனர். அல்லது அலைபேசியூடாக மிரட்டப்படுகின்றனர்.

இன்னொருபுறம் தமிழர் தம் தாய்நிலம் முழுவதும் மிக,மிக வேகமாக சிங்கள எதேச்சாதிகாரங்களால் கபளீகரம் செய்யப்பட்டு அவர்கள் கண்முன்னேயே திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. இது ஒரு திட்டமிடப்பட்ட இன, கலாச்சார அழிப்பு என்பதுடன் ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களுக்கு எதிரான அரசியல் ஆத்திரமூட்டலாகவே கருதப்படவேண்டும். ஆனால் இதனை தமிழ் அரசியல் தலைமைகள் தாங்களும் புரிந்துகொள்ளவில்லை, மக்களையும் விழிப்பூட்டவில்லை.


எனவே ஒற்றைப் பெரும்பான்மை இனவழிப்பு அரசிடம் ஒருபோதும் கைகட்டி நீதி கோர முடியாது. மேலும், இனவாதசொற்பதங்களாலும், நடவடிக் கைகளாலும் தொடர்ந்து தமிழ் மக்களை தாக்கிக்கொண்டிருக்கும் பேரினவாத அரசகுழுக்களுடன் தொடர்ந்தும் நல்லுறவை பேணுவது பற்றிய பஞ்சடைத்த, எலிவாடை வீசுகின்ற சாணக்கியத்தன்மைகளை அள்ளி குப்பையில் போட்டுவிட்டு அதற்கு ஈடாக சரியான அரசியல் அடித்தளத்தில் இருந்து தமிழ் மக்கள் தங்களை தன்னைத்தானே தற்காத்துக்கொள்ளும் பொறிமுறைகளை உருவாக்குதல்வேண்டும். இதற்கான ஜன நாயகம் சார்ந்த வழிமுறையில் அரசியல் தலைமைகள் துரிதமாக செயற்படவேண்டிய தேவையை காலம் தமிழ் அரசியல் தலைமைகளிடம் ஒப்படைத்திருக்கின்றது. இதனை இனிவரும் காலங்களிலாவது தங்களது தான்தோன்றித்தனமான அரசியல் நகர்வுகளிலிருந்து விடுபட்டு மண்ணிற்கும் மக்களுக்குமான அரசியலை மேற்கொள்வோம் என விடுதலைக்காய் உயிர்நீத்த மாவீரர்களின் கல்லறைகளில் கைவைத்து அரசியல்தலைமைகள் முதலில் மானசீகமாக உறுதியெடுத்துக்கொள்ளவேண்டும்.

அதேநேரத்தில் நாம்படும் துயருக்கும் கண்ணீருக்கும் ஆதரவாக ஏனைய பேரினவாதம் சார்ந்த,காட்டிகொடுப்பு அரசியல் செய்கின்ற எந்த ஒரு கட்சியும் ஒரு விரலைக்கூட உயர்த்தமாட்டார்கள் எனும் வரலாற்று உண்மையை அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்கள் உணர்ந்துகொண்டு எதிர்வரும்காலங்களிலாவது மாவீரர்களின் கனவுகள் மெய்ப்படவேண்டி செயற்படுவோமென அனைத்து தமிழர்களும் மாவீரர் கல்லறைகளின்மீது உறுதி எடுத்துக்கொள்வோமாக.












# ஈழநாட்டின் உதவிக்கரம்



மூத்த மாவீரர் பண்டிதரின் (ரவி) தாயார்



மாவீரர் நிசாந்தனின் தாயார்



முதல் பெண் தளபதி மாவீரர் சோதீயாவின் தாயார்



புலிகளின் ஆரம்பகால உறுப்பினர் சூரியப்பா



மாவீரர் சேகரின் மனைவி



மாவீரர் கலைவாணனின் தந்தை



நிசாந்தன் மாஸ்டரின் மனைவி

மாவீரர்களான கண்ணன் மற்றும் குகதா (1997, 1996) ஆகியோரின் தாயார்.



நமது ஈழநாடு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள 10 மாவீரர்களின் பொற்றோருக்கு நிதி உதவிகள் வழங்கிவைக்கப் பட்டன.

மனித உரிமை செயற்பாட்டாளரான கீத் குலசேகரம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து நடாத்தப்பட்டு வரும் நமது ஈழநாடு வாழ்வாதார திட்டத்தின் கீழ் இம்முறை மாவீரரின் சிறப்பு வாரத்தை முன்னிட்டு 10 மாவீரர்களின் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உதவிகளை பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் மற்றும் அவருடைய கட்சி உறுப்பினர்கள் இணைந்து பெற்றோரின் வீடுகளுக்கு சென்று வழங்கிவைத்திருந்தனர்.

போரால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்கள் இனம்காணப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான உதவிகள் நமது ஈழநாட்டினால் மாதாந்தம் வழங்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.